செந்தமிழறிஞர்கள்

(108)

ISBN : 978-81-686424-7-8



க வெள்ளைவாரணனர்

பகுப்பும் தொகுப்பும்
முனைவர் சு இராமலிங்கம்

NSR 100 Educational Trust
[An ISO 9001 - 2015 Certified]
AD-13,5th Street, Anna Nagar West, Chennai - 600 040
www.nasubbureddiar100.in



https://www.annacentenarylibrary.org/pages/view/106.%20%E0%AE%95.%E0%AE%B5%E0%AF%86%E0%AE%B3%E0%AF%8D%E0%AE%B3%E0%AF%88%E0%AE%B5%E0%AE%BE%E0%AE%B0%E0%AE%A3%E0%AE%A9%E0%AE%BE%E0%AE%B0%E0%AF%8D_1917

செந்தமிழ்சிற்பிகள்

க.வெள்ளைவாரணனார் *(1917-1988)*



அறிமுகம்

தமிழறிஞர். அண்ணாமலைப் பல்கலைக்கழத்திலிருந்து தமிழிசைப் பணி ஆற்றியவர். இயற்றமிழோடு, இசைத்தமிழின் நுணுக்கங்களை அறிந்த நுண்ணறிவாளராகத் திகழ்ந்தவர். யாழ்நூல் விபுலானந்த அடிகளாரால் உருவாக்கப்பட உதவியவருள் இவரும் ஒருவர். இவர் 'இசைத் தமிழ்' என்ற அரிய நூல் ஒன்றைத் தந்துள்ளார். இந்நூல் முத்தமிழ்த் திறம், இசை நூல் வரன்முறை, இசையமைதி, இசைத் தமிழ் இலக்கியம், இசைக் கருவிகள், இசைப்பாட்டின் இலக்கணம், இசைத் தமிழ்ப் பயன், தமிழிசை இயக்கம், இசைத்தமிழ் வளர்ச்சிக்கு ஆக்கமாகும் பணிகள் என்ற ஒன்பது இயல்களைக் கொண்டுள்ளது.

இளமை

தஞ்சை மாவட்டம் குடந்தைக்கு அருகிலுள்ள திருநாகேசுவரத்தில் ஓர் கைக்கோள செங்குந்தர் குடும்பத்தில் கந்தசாமி முதலியார் - அமிர்தம் அம்மையார் தம்பதியருக்கு மகவாக 1917ம் ஆண்டு ஜனவரி 14ம் தேதி வெள்ளைவாரணனார் பிறந்தார். தம் இளமைக் கல்வியை தி ருநாகேசுவரத்தில் கற்ற வெள்ளைவாரணனார், திருப்பெருந்துறை மாணிக்கவாசகர் தேவாரப் பாடசாலையில் மாணாக்கராகச் சேர்ந்து திருமுறைகளை இசையோடு கற்றுத் தேர்ச்சி பெற்றார். பின்னர் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் வித்துவான் படிப்பில் சேர்ந்து 1935 இல் வித்துவான் தேர்வில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற் றார்.1935-37 இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ஆய்வு மாணவராகச் சேர்ந்து,'தொல்காப்பியம் - நன்னூல் எழுத்ததிகாரம் ஒப்பீடு' என்னும் ஆய்வேட்டினை எழுதி முடித்தார். வெள்ளைவாரணனார் 1938 முதல் 1943 வரை தஞ்சாவூர் கரந்தைத் தமிழ்க் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணிபுரிந்தார்.
1939 ஆம் ஆண்டு பொற்றடங்கண்ணி அம்மையாரை வாழ்க்கைத் துணைவியாக ஏற்றார்.

பணி

1943 இல் வெள்ளைவாரணனார் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் விரிவுரையாளராகச் சேர்ந்தார்.
1962 இல் இவரின் புலமை நலனைக் கருத்தில் கொண்டு விதிகளைத் தளர்த்தி பல்கலைக்கழகம் இவருக்கு இணைப்பேராசிரியர் பதவி வழங்கியது. 1977 ஆம் ஆண்டு துறைத்தலைவர் பொறுப்பை ஏற்றார். பல்கலைக்கழக ஆளவை மன்றம், ஆட்சிக்குழு ஆகியவற்றில் உறுப்பினராகவும் பணிபுரிந்தார். தம் 62 இம் வயது வரை அங்குப் பணியாற்றி 1979 இல் ஓய்வு பெற்றார்.
1979 முதல் 1982 ஆம் ஆண்டு வரை மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் சிறப்புப் பேராசிரியராகவும், துறைத்தலைவராகவும் பணியாற்றினார்.

சிறப்புகள்

தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் இவருக்கு 1985 இல் கலைமாமணி விருதை வழங்கியது. தமிழ் நாட்டிலுள்ள பல்வேறு இலக்கியம் மற்றும் சமய அமைப்புகளும், பல்கலைக்கழகங்களும் வெள்ளைவாரணனாருக்குப் பல்வேறு விருதுகளை வழங்கி பெருமை சேர்த்துள்ளன.

- சித்தாந்தச் செம்மல்
- தமிழ்ப் பெரும்புலமைச் சான்றோர்
- திருமுறை உரைமணி
- செந்தமிழ்ச் சான்றோர்
- தமிழ்மாமணி
- சிவகவிமணி
- திருமுறைத் தெய்வமணி
- தமிழ்ப் பேரவைச் செம்மல்

ஆகிய விருதுகள் பல்வேறு ஆண்டுகளில் இவருக்கு வழங்கப்பட்டன.

மறைவு

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும்போது வெள்ளை வாரணனாருக்கு உடல் நலம் குன்றியது.எனவே தில்லை சென்று தங்கி வாழ்ந்திருந்த வெள்ளைவாரணனார் 1988 ஆம் ஆண்டு ஜூன் 13 ஆம் நாள் இவ்வுலகை விட்டு மறைந்தார்.

(😊)(😊)(😊) @@@@@@ (😊)(😊)(😊)


பேராசிரியர் க.வெள்ளைவாரணனார் அவர்களது நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்கள்


24.	[தொல்காப்பியம்-மரபியல்-உரைவளம்]
25.	[பன்னிரு திருமுறை வரலாறு]
26.	[பன்னிரு திருமுறை வரலாறு - இரண்டாம் பகுதி]


இலக்கிய வாழ்க்கை


இலக்கிய ஆய்வாளராகவும், நூலாசிரியராகவும் வெள்ளைவாரணரின் பங்களிப்பு இசைத்தமிழ், இலக்கணம், இலக்கியம், சைவ சித்தாந்தம் ஆகிய நான்கு துறைகளில் அமைந்தது.

இலக்கண வரலாற்றாய்வு









வெள்ளைவாரணரின் இலக்கணத்துறை நூல்களில், 'தமிழ் இலக்கிய வரலாறு தொல்காப்பியம்', 'தொல்காப்பியம் - நன்னூல் எழுத்ததிகாரம்', 'தொல்காப்பியம் - நன்னூல் சொல்லதிகாரம்', இரண்டும் குறிப்பிடத்தக்கவை.

வெள்ளைவாரணரின் 'இலக்கிய வரலாறு: தொல்காப்பியம்' அவர் பணியாற்றிய அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தொடங்கி நிகழ்வுற்ற தமிழிலக்கிய வரலாற்றாய்வுத் தொகுதிகளின் வரிசையில் முதல் தொகுதியாய் அமைந்து, 1952-ல் வெளியிடப்பட்டது. தொல்காப்பியம் தொடர்பான வரலாற்றுச் செய்திகள், தமிழ்ச்சங்கங்களின் வரலாறு, இறையனார் அகப்பொருள் தோன்றக் காரணம், தொல்காப்பிய உரைகள், தொல்காப்பியர்-அகத்தியர் தொடர்பான புனைவுகள், உண்மைகள், தொல்காப்பியத்தை

இயற்றுவித்த நிலந்தருதிருவிற் பாண்டியன், அரங்கேற்றம் கேட்ட அதங்கோட்டாசான், ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் என்ற கருத்து, தொல்காப்பியரின் காலம், சமயம், இயற்பெயர் போன்ற பல்வேறு வரலாற்றுச் செய்திகளையுக் கூர்ந்து ஆராய்ந்து உரைத்தார் .இரண்டாம் பகுதியில் தொல்காப்பியம்: நுதலிய பொருள்' என்னும் தலைப்புடன் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் எனும் மூன்று அதிகாரங்களின் இலக்கணங்கள் விளக்கப்பட்டுள்ளன.

வெள்ளைவாரணரின் 'தொல்காப்பியம் - நன்னூல்: எழுத்ததிகாரம்', 'தொல்காப்பியம் - நன்னூல்: சொல்லதிகாரம்' என்ற இரண்டும் ஒப்பிலக்கண நூல்கள். தொல்காப்பிய நூற்பாக்களுக்கு நேரான பொருளும் உரையாசிரியர்களின் கருத்துகளையும் விளக்கி, அப்பாக்களுக்கு இணையான இலக்கணம் தாங்கிய நன்னூல் நூற்பாக்களை எடுத்துக்காட்டி. ஒப்பீட்டு விளக்கம் அளிக்கிறார். நேமிநாதம், வீரசோழியம் போன்ற இலக்கண நூல்களும் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன. ஆய்தமென்ற எழுத்தொலி தமிழிற்கேயுரிய சிறப்பொலி என்பதை வலியுறுத்தி, வடமொழியில் ஆஸ்ரதம் என்னும் விசர்கமே ஆய்த எழுத்தாகத் திரிந்தது என்ற மு. இராகவையங்காரின் கருதுகோளை மறுத்துரைத்தார்.

ஜூலை 6, 1987 அன்று தொல்காப்பியப் பொருளதிகார ஆய்வு என்னும் தலைப்பில் நாவலர் சோமசுந்தர பாரதியார் நினைவுச் சொற்பொழிவு நிகழ்த்தினார்[1]. தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றியபோது சங்க இலக்கியப் பொருட்களஞ்சியத்தை உருவாக்கினார்.

சைவம்

வெள்ளைவாரணர் 'திருவுந்தியார்' , 'திருக்களிற்றுப்படியார்', 'சேக்கிழார் நூல்நயம்' ,'பன்னிரு திருமுறை வரலாறு' ,'தில்லைப் பெருங்கோயில் வரலாறு', 'திருவருட்பாச் சிந்தனை' ஆகிய சைவ சமயம் சார்ந்த நூல்களையும், 'தேவார அருள்முறைத் திரட்டுரை',

'திருமந்திர அருள்முறைத் திரட்டுரை', 'திருவருட்பயன் விளக்கவுரை' முதலிய உரை நூல்களையும் இயற்றினார்.

வெள்ளைவாரணரின் 'பன்னிரு திருமுறை வரலாறு' சமயக்குரவர்களின் வரலாறும் அருட்செயல்களும் பற்றிய நூலாக இருப்பினும், இதன் பயன்பாடு அவற்றை மீறியது. பன்னிருதிருமுறை ஆசிரியர்களின் கால ஆய்வு, திருப்பதிகங்களின் பொருட்பாகுபாடு, தேவாரப் பாடல்பெற்ற தலங்கள் பற்றிய செய்திகள், வைப்புத்தலங்கள் பற்றிய குறிப்புகள், சைவக்குரவர்கள் வாயிலாக வெளிப்பட்ட சிவநெறிக் கொள்கை அல்லது சைவசித்தாந்தக் கொள்கை, திருத்தொண்டர்புராணத்திற்கு முன்னூற் சான்றுகள், நாயன்மார்கள், திருத்தொண்டர்கள் ஆகியோரின் பாக்களில் திருக்குறளின் தாக்கம் போன்ற செய்திகள் இந்நூலில் அடங்கியுள்ளன. தேவாரப்பண்கள் மற்றும் இசைத்தமிழ் பற்றிய ஆய்வுநூலாகவும் இது விளங்குகிறது.

திருவருட்பாச் சிந்தனை அருட்பா மருட்பா விவாதத்தின் இறுதிக்கட்டத்தில் இருசாராரின் சமரசத்திற்காக திரு.வி. கல்யாணசுந்தரனாரின் தூண்டுதலில் வெள்ளைவாரணர் எழுதிய நூல். திருவருட்பாவில் வள்ளலாரின் சிந்தனை புதியதன்று, திருவருட்பா சைவக் குரவர்களின் சிந்தனை வழி அமைந்ததே என்ற வெள்ளைவாரணரின் நிலைப்பாட்டை இந்நூல் எதிரொலிக்கிறது.

தில்லை நடராசப் பெருமான் திருக்கோயிலில் திருமுறைகளை நடராசப் பெருமான் சன்னதியிலேயே ஓதவேண்டும் என்று வ.சுப. மாணிக்கனாருடன் போராட்டத்தில் ஈடுபட்டார். தில்லைப் பெருங்கோயில் வரலாற்றை நூலாக எழுதினார்.

இசைத்தமிழ் பணிகள்

யாழ்நூல் உருவாக்கம், வெளியீடு

வெள்ளைவாரணர் சுவாமி விபுலானந்தரின் நட்பால் இசைத்தமிழிலும் நாட்டம் கொண்டு அவரிடம் இசை பயின்றார். யாழ்நூலை

இயற்றுவதில் ஆசிரியர்க்குப் பெரும் துணை புரிந்ததன் வாயிலாகத் தமிழ் இசையியலின் நுட்பங்களை உணர்ந்து கொண்டார். விபுலானந்தரின் யாழ்நூல் உருவாக்கத்திலும், வெளியீட்டிலும், அரங்கேற்றத்திற்கும் (1947) துணை புரிந்தார். திருக்கொளம்புதூரில் யாழ்நூல் அரங்கேற்றத்தின்போது அந்நூலின் சிறப்புகளைப் பற்றிய அறிமுக உரையாற்றினார். 1974-ம் ஆண்டு மீண்டும் 'யாழ் நூல்' இரண்டாம் பதிப்பை கரந்தைத் தமிழ்ச் சங்கம் வெளியிட்டபோது அப்பதிப்பிற்கான நீண்ட சிறப்புப் பாயிரம் இயற்றி[2], முன்னுரையும் எழுதினார். வெள்ளைவாரணரின் முன்னுரை யாழ் நூலைப் பற்றிய முழுமையான, சுருக்கமான கண்ணோட்டத்துடன், யாழ் நூலாசிரியர், தமிழிசை வரலாறு ஆகியவை குறித்த பல அரிய செய்திகளையும் கொண்டிருந்தது. இப்பதிப்பு வெள்ளைவாரணரின் முன்னுரையின் ஆங்கில மொழியாக்கத்துடன் (மொழியாக்கம்: ந.மு. கோவிந்தசாமி நாட்டார்) வெளிவந்தது[3][4]. வெள்ளைவாரணர் அப்பதிப்புச் செலவிற்காக ஆயிரம் ரூபாய் நன்கொடையாகவும் வழங்கினார்.

வெள்ளைவாரணரின் ஆய்வுநெறிமுறைகள் முழுவதுமாக யாழ்நூலையே அடிப்படையாகக் கொண்டன. தேவாரப் பாடல்களிலும் நாயன்மார்களிடமும் ஆழ்ந்த பற்று கொண்ட சைவராக இருந்தமையால் தம் இசைத் தமிழாய்விற்கான களமாகத் தேவாரத் திருப்பதிகங்களையே அமைத்துக் கொண்டார். இசைத்தமிழ் சார்ந்த நூல்களிலும், பிற கட்டுரைகளிலும் இவற்றினடிப்படையிலேயே தம் கருத்துகளைத் தெரிவிக்கிறார்.

பன்னிரு திருமுறை வரலாறு

'பன்னிரு திருமுறை வரலாறு' நூலின் முதற் பகுதியில் 'தேவாரத் திருப்பதிகங்கள்' என்னும் இயலில் 'தொகுப்பு முறை; 'இசையமைதி' ஆகிய தலைப்புகளின் கீழ் இசைத்தமிழ் குறித்தும், தேவாரப் பண்கள் குறித்தும் அரிய தகவல்களை அளிக்கிறார். பண்முறைத் தொகுப்பு பற்றிக் கூறும் பொழுதே பழந்தமிழிசை மரபை யொட்டிப் பண்கள் குறித்தும் , பண்முறையில் பண்கள் வரிசைப்படுத்தப் பட்டிருப்பதற்கான முறைமையையும், காரணங்களையும் ஆராய்கிறார். நட்டபாடை, தக்கராகம், பழந்தக்கராகம், தக்கேசி, குறிஞ்சி, வியாழக் குறிஞ்சி, மேகராகக் குறிஞ்சி, யாழ்முரி என முதல் திருமுறையின்

நூற்று முப்பத்தாறு திருப்பதிகங்களும் வரிசைப்படுத்தி அமைக்கப்பட்டுள்ள முறையை ஆய்வுக்குட்படுத்தி விளக்குகிறார். இசையொலியின் தோற்றம், பண்களின் பிறப்பு, சுருதி, சுரங்களின் பெயர்க்குறிப்புகள், ஆளத்தி என இசையியலின் பல கூறுகளையும் பழம் பாடல்கள் வாயிலாகவும், சிலப்பதிகார உரையில் காணப்படும் நூற்பாக்களையும் கொண்டு விளக்கமளிக்கிறார்.

விருதுகள், சிறப்புகள்

- சித்தாந்தச் செம்மல் (தூத்துக்குடிச் சைவ சித்தாந்தச் சபை,1944)
- திருமுறை உரைமணி (காஞ்சிபுரம் ஸ்ரீசங்கரமடம் 1954)
- தமிழ்ப் பெரும்புலமைச் சான்றோர் (திருவண்ணாமலை குன்றக்குடி. ஆதீனம்,1970)
- திருமுறை ஆராய்ச்சிக் கலைஞர் (தருமபுர ஆதீனம் 1971).
- முதல் பரிசு, தமிழக அரசின் தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம், பன்னிரு திருமுறை வரலாறு -இரண்டாம் பகுதி நூலுக்காக (ஏப்ரல் 7,1973)
- செந்தமிழ்ச் சான்றோர் (கரந்தைத் தமிழ்ச்சங்கம், 1984)
- கலைமாமணி விருது (தமிழக அரசு,1985)
- தமிழ்மாமணி
- சிவகவிமணி
- திருமுறைத் தெய்வமணி
- தமிழ்ப் பேரவைச் செம்மல் (மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், ஜூலை 5,1 989)

இலக்கிய இடம்

வெள்ளைவாரணர் இலக்கணம், சமய இலக்கியம், இசைத்தமிழ் ஆகிய துறைகளில் விரிவான ஆய்வுகள் மேற்கொண்டார். தொல்காப்பியத்தின் வரலாறு குறித்த அவரது ஆய்வுகள்

முக்கியமானவை. இறையனார் அகப்பொருள் இயற்றப்பட்டதன் வரலாற்றுக் காரணமாக கடைச்சங்க காலத்தில் பாண்டிய நாட்டில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களால் தொல்காப்பியத்தின் பொருளதிகாரம் மறைந்துபோனதைச் சுட்டிக் காட்டுகிறார். இறையனார் பொருளதிகாரச் சூத்திரங்களைப் பற்றி அறிந்திருந்த ஓர் புலவராக இருக்கவேண்டும் என்றும் குறுந்தொகையின் முதல் பாடலை இயற்றிய இறையனாரும் இவரும் ஒருவரே என்னும் வெள்ளைவாரணரின் முடிவு அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. தொல்காப்பியத்தின் காலம் உட்பட பல வரலாற்றுச் செய்திகளை ஆய்ந்து இலக்கண வரலாற்றாய்வின் முன்னோடிகளுள் ஒருவராகத் திகழ்ந்தார்.

வெள்ளைவாரணரின் பன்னிரு திருமுறை வரலாறு பல அரிய மானிடவியல் செய்திகளும் இசை மற்றும் சைவசித்தாந்தச் செய்திகளும் கல்வெட்டுச் செய்திகளும் அடங்கிய ஆதாரஆய்வுநூலாகக் கருதப்படுகிறது[7] .வெள்ளைவாரணனார் சைவ சமய நோக்கிற்குள் அடங்கும் தர்க்கரீதியான முறையில் கால ஆராய்ச்சி, இலக்கண ஆய்வு, கல்வெட்டாய்வு ஆகிய கருவிகளைக்கொண்டு ஆய்வு செய்தார்.

"தமிழ்த் திருமுறை வரலாற்றில், தேவாரத் திருமுறைகளைக் கண்டு அவற்றை ஏழு திருமுறைகளாக வகுத்துக் கொடுத்த நம்பியாண்டார் நம்பிக்குப் பின், பன்னிரு திருமுறைகளின் வரலாற்றையும் தொகுத்து, வகுத்து, விரித்துரைத்தவராக வெள்ளைவாரணர் திகழ்கிறார். பேராசிரியரின் தமிழ்ப் பணிகளிலெல்லாம் தலையாயதாகவும், ஈடு இணையற்றதாகவும் இது விளங்குகின்றது. இப்பெருநூல் இயற்றமிழ், குறிப்பாகப் பக்தி இலக்கியம், இசைத் தமிழ் ஆகிய இரண்டு துறைகளிலும் ஆய்வு செய்வோர்க்கு ஒரு கலங்கரை விளக்கமாக விளங்குகின்றது. " என அரிமளம். சு.பத்மநாபன் குறிப்பிடுகிறார். யாழ்நூலின் ஆக்கத்திலும், வெளியீட்டிலும் வெள்ளைவாரணரின் பணி குறிப்பிடத்தக்கது.

படைப்புகள்

இலக்கியம்

- தொல்காப்பியப் பொருளதிகார ஆய்வு

- தொல்காப்பியம் களவியல் உரைவளம்
- தொல்காப்பியம் கற்பியல் உரைவளம்
- தொல்காப்பியம் மெய்ப்பாட்டியல் உரைவளம்
- தொல்காப்பியம் நன்னூல் - எழுத்ததிகாரம்
- தொல்காப்பியம் நன்னூல் - சொல்லதிகாரம்
- தொல்காப்பியம் பொருளியல் உரைவளம்
- தொல்காப்பியம் புறத்திணையியல் உரைவளம்
- தொல்காப்பியம் உவமையியல் உரைவளம்
- தொல்காப்பியம் வரலாறு
- தொல்காப்பியம்-செய்யுளியல் உரைவளம்
- தொல்காப்பியம்-மரபியல்-உரைவளம்
- குறிஞ்சிப்பாட்டாராய்ச்சி
- சங்ககால தமிழ் மக்கள்

சமயம்

- திருவுந்தியார்
- திருக்களிற்றுப்படியார்
- சேக்கிழார் நூல்நயம்
- பன்னிரு திருமுறை வரலாறு
- தில்லைப் பெருங்கோயில் வரலாறு
- திருவருட்பாச் சிந்தனை
- திருமந்திர அருள்முறைத் திரட்டு
- திருத்தொண்டர் வரலாறு
- திருவருட்பாச் சிந்தனை
- சைவ சித்தாந்த சாத்திர வரலாறு
- திருவருட் பயன்

உரை

- தேவார அருள்முறைத் திரட்டுரை
- திருமந்திர அருள்முறைத் திரட்டுரை
- திருவருட்பயன் விளக்கவுரை
- அற்புதத் திருவந்தாதி

கவிதை

- காக்கை விடு தூது

தமிழிசை

- இசைத்தமிழ்

இந்தி மொழி எதிர்ப்பு

இராஜ கோபாலாச்சாரியார் சென்னை மாகாண முதலமைச்சரக இருந்த போது 1938 இல் இந்தியாவிலேயே முதன் முதலாக சென்னை மாகாணத்திலுள்ள உயர்நிலைப் பள்ளிகளில் இந்தியைக் கட்டாயப் பாடமாக்கினார். தமிழைக் கட்டாயப் பாடமாக்காமல், இந்தியைக் கட்டாயப் பாடமாக்கியதை எதிர்த்து மறைமலையடிகள், சோமசுந்தர பாரதியார், பெரியார், அறிஞர் அண்ணாதுரை முதலானோர் எதிர்ப்புக் குரல் கொடுத்தனர். பலர் சிறைப்படுத்தப்பட்டனர். தமிழ்ப் புலவர் பெருமக்கள் கிளர்ந்தெழுந்தனர். இவ்வெழுச்சி கரந்தைப் புலவர் கல்லூரியில் பணியாற்றிய வெள்ளைவாரணனாரையும் ஆட்கொண்டது. 1939 இல் 'பாந்தளூர் வெண்கோழியார்' என்ற புனைப் பெயரில் 'காக்கை விடுதூது' என்னும் நூலை எழுதி முதலமைச்சருக்கு அனுப்பியதன் மூலம் போராட்டத்தில் தாமும் ஈடுபட்டார்.

தமிழ மரபு அறக்கட்டளை

தமிழர் வரலாற்றுக்கு ஓர் அரண்

https://thfcms.tamilheritage.org/%E0%AE%95-%E0%AE%B5%E0%AF%86%E0%AE%B3%E0%AF%8D%E0%AE%B3%E0%AF%88%E0%AE%B5%E0%AE%BE%E0%AE%B0%E0%AE%A3%E0%AE%A9%E0%AE%BE%E0%AE%B0%E0%AF%8D/

"தமிழ்மாமணி" க.வெள்ளைவாரணனார்

"பண்பிலே இமயம், நல்ல படிப்பிலே இமயம், தூய அன்பிலும் இமயம்" எனக் கலைமாமணி க.வெள்ளைவாரணனாரை டாக்டர் தமிழண்ணல் பாராட்டுவார்.



குள்ளமான தோற்றம், அறிவுக் கூர்மையினையும், ஆன்மிக ஈடுபாட்டினையும் ஒருசேரப் புலப்படுத்தும் அகன்ற நீறு பூசிய நெற்றி, பார்ப்போரை ஈர்க்கும் புன்னகை தவழும் முகம், எளிய தூய வெண்ணிற உடை உடுத்திய மேனி இவ்வாறு விளங்கியவரே வெள்ளைவாரணனார் ஆவார்.
பயனில சொல்லாப் பண்பும், நகைச்சுவை இழையோடுமாறு இன்சொல் பேசும் இயல்பும் கொண்டிருந்த இப்புலவர் பெருந்தகை, மாணாக்கரின் அன்புக்குரியவராகத் திகழ்ந்தார். இவர் தமிழ் இலக்கியம், இலக்கணம், திருமுறைகள், சைவசித்தாந்தம் ஆகியவற்றைக் கற்றுத் துறைபோய நற்றமிழ் அறிஞர் ஆவார். ஓர் இலக்கியச் செல்வராகவும், இலக்கணக் கடலாகவும், கன்னித் தமிழ்க் காவலராகவும் விளங்கிய இவரை ஆன்றவிந்தடங்கிய அருந்தமிழ்ச் சான்றோர் எனலாம். இயற்றமிழோடு, இசைத்தமிழின் நுணுக்கங்களை அறிந்த நுண்ணறிவாளராகவும் திகழ்ந்தமை இவரின் தனிச் சிறப்பாகும்.

தஞ்சை மாவட்டம் குடந்தைக்கு அருகிலுள்ள திருநாகேசுவரத்தில் செங்குந்தர் மரபில் கந்தசாமி முதலியார் – அமிர்தம் அம்மையார் தம்பதியருக்கு மகவாக 1917ம் ஆண்டு ஜனவரி 14ம் தேதி வெள்ளைவாரணனார் பிறந்தார். தம் இளமைக் கல்வியை திருநாகேசுவரத்தில் கற்ற வெள்ளைவாரணனார், திருப்பெருந்துறை

மாணிக்கவாசகர் தேவாரப் பாடசாலையில் மாணாக்கராகச் சேர்ந்து திருமுறைகளை இசையோடு கற்றுத் தேர்ச்சி பெற்றார். பின்னர் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் வித்துவான் படிப்பில் சேர்ந்து 1935ல் வித்துவான் தேர்வில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார். 1935-37ல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ஆய்வு மாணவராகச் சேர்ந்து, தொல்காப்பியம் – நன்னூல் எழுத்ததிகாரம் ஒப்பீடு என்னும் ஆய்வேட்டினை எழுதி முடித்தார். வெள்ளைவாரணனார் 1938 முதல் 1943 வரை தஞ்சை கரந்தைத் தமிழ்க் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணிபுரிந்தார். 1939ம் ஆண்டு செங்கல்பட்டு கனகசபை முதலியாரின் மகள் பொற்றடங்கண்ணி அம்மையாரை வாழ்க்கைத் துணைவியாக ஏற்றார். 1943ல் வெள்ளைவாரணனார் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் விரிவுரையாளராகச் சேர்ந்தார். 1962ல் இவரின் புலமை நலனைக் கருத்தில் கொண்டு விதிகளைத் தளர்த்தி பல்கலைக்கழகம் இவருக்கு இணைப்பேராசிரியர் பதவி வழங்கியது. 1977ம் ஆண்டு துறைத்தலைவர் பொறுப்பை ஏற்றார். பல்கலைக்கழக ஆளவை மன்றம், ஆட்சிக்குழு ஆகியவற்றில் உறுப்பினராகவும் பணிபுரிந்தார். தம் 62ம் வயது வரை அங்குப் பணியாற்றி 1979ல் ஓய்வு பெற்றார். 1979 முதல் 1982ம் ஆண்டு வரை மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் சிறப்புப் பேராசிரியராகவும், துறைத்தலைவராகவும் பணியாற்றினார்.

வெள்ளைவாரணனார்,

- தமிழ் இலக்கிய வரலாறு – தொல்காப்பியம்
- தொல்காப்பியம் – நன்னூல் எழுத்ததிகாரம்
- தொல்காப்பியம் – நன்னூல் சொல்லதிகாரம்
- தொல் – பொருள் உரைவளம் (ஏழு தொகுதிகள்)
- ஆகிய இலக்கண நூல்களையும்,
- குறிஞ்சிப்பாட்டாராய்ச்சி
- சங்ககால தமிழ் மக்கள்
- ஆகிய சங்க இலக்கியம் சார்ந்த நூல்களையும்,
- திருவுந்தியார்
- திருக்களிற்றுப்படியார்
- சேக்கிழார் நூல்நயம்

- பன்னிரு திருமுறை வரலாறு
- தில்லைப் பெருங்கோயில் வரலாறு
- திருவருட்பாச் சிந்தனை
- ஆகிய சைவ சமயம் சார்ந்த நூல்களையும்,
- தேவார அருள்முறைத் திரட்டுரை
- திருமந்திர அருள்முறைத் திரட்டுரை
- திருவருட்பயன் விளக்கவுரை
- ஆகிய உரை நூல்களையும்,
- காக்கைவிடுதூது என்னும் படைப்பிலக்கியத்தையும்
- இசைத்தமிழ், நாடகத்தமிழ் சார்ந்த நூல்களையும்

எழுதியுள்ளார்.

விபுலானந்தரின் யாழ் நூலுக்கு இவர் எழுதியுள்ள முன்னுரை இவரின் இசைப் புலமைக்குச் சான்றாக அமைந்துள்ளது. வெள்ளைவாரணனாரின் உரை நூல்கள் அவரின் நுண்மான் நுழை புலத்தினைக் காட்டுவன. திருமந்திர அருள்முறைத் திரட்டு என்னும் உரைநூலில் இடம்பெற்றுள்ள ஒரு பாடலும் அதன் விளக்கவுரையும் கீழே தரப்பட்டுள்ளன.

நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும்
தேடித் திரிந்து சிவபெருமானென்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாக் கொள்வேனே.

இப்பாடலில் இடம் பெற்றுள்ள;

தேடுதல் என்பது அன்பர் பலரையும் வினவிச் செல்லுதல்
திரிதல் என்பது சிவபரம்பொருளை எதிர்ப்பட்டுக் கண்டு மகிழவேண்டும் என்னும்
ஆர்வத்துடன் அடியார் பலருடன் பல ஊர்களில் சுற்றியலைதல்
பாடுதல் என்பது வாக்கின் தொழில்
பணிதல் என்பது காலத்தின் தொழில்.

1937ல் இராஜகோபாலாச்சாரியார் சென்னை மாகாண முதலமைச்சர் ஆனார். 1938ல் இந்தியாவிலேயே முதன் முதலாக மாகாணத்திலுள்ள உயர்நிலைப் பள்ளிகளில் இந்தியைக் கட்டாய பாடமாக்கினார். தமிழைக் கட்டாயப் பாடமாக்காமல், இந்தியைக் கட்டாயப் பாடமாக்கியதை எதிர்த்து மறைமலையடிகள், சோமசுந்தர பாரதியார், தந்தை பெரியார், அறிஞர் அண்ணா முதலானோர் எதிப்புக் குரல்

கொடுத்தனர். பலர் சிறைப்படுத்தப்பட்டனர். தமிழ்ப் புலவர் பெருமக்கள் கிளர்ந்தெழுந்தனர். இவ்வெழுச்சி கரந்தைப் புலவர் கல்லூரியில் பணியாற்றிய வெள்ளைவாரணனாரையும் ஆட்கொண்டது. 1939ல் பாந்தளூர் வெண்கோழியார் என்ற புனைப் பெயரில் காக்கை விடுதூது என்னும் நூலை எழுதி முதலமைச்சருக்கு அனுப்பியதன் மூலம் போராட்டத்தில் தாமும் ஈடுபட்டார்.

தமிழ் நாட்டிலுள்ள பல்வேறு இலக்கியம் மற்றும் சமய அமைப்புகளும், பல்கலைக்கழகங்களும் வெள்ளைவாரணனாருக்குப் பல்வேறு விருதுகளை வழங்கி பெருமை சேர்த்துள்ளன.

- சித்தாந்தச் செம்மல்
  தமிழ்ப் பெரும்புலமைச் சான்றோர்
  திருமுறை உரைமணி
  செந்தமிழ்ச் சான்றோர்
  தமிழ்மாமணி
  சிவகவிமணி
  திருமுறைத் தெய்வமணி
  தமிழ்ப் பேரவைச் செம்மல்
-

ஆகிய விருதுகள் பல்வேறு ஆண்டுகளில் கொடுக்கப்பட்டவை.

தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் இவருக்கு 1985ல் கலைமாமணி விருதை வழங்கியது. தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும்போது வெள்ளைவாரணனாருக்கு உடல் நலம் குன்றியது. தில்லை சென்று தங்கி அங்கு ஆடவல்லானையே சிந்தித்து வாழ்ந்திருந்த இப்புலவர் பெருமான் 1988ம் ஆண்டு ஜூன் 13ம் தேதி இவ்வுலக வாழ்வை நீத்தார்.

அன்பு நெஞ்சர் அருந்தமிழ்க் காதலர்
பண்பின் உறைவிடம் பழகுதற் கினியார்
கள்ளம் சிறிதிலா வெள்ளை வாரணர்
நிலைத்த புகழுடன் நீடு வாழ்கவே!

நன்றி: தமிழ்மணி (தினமணி)

தமிழறிஞர் க. வெள்ளை வாரணனார் முதலியார்


https://senguntharmudaliarhistory.blogspot.com/2020/10/Ka%20vellaivanavanar%20mudaliar%20kaikolar.html

செங்குந்தர் கைக்கோள முதலியார்

குலத்தோன்றல்

தமிழறிஞர்

க. வெள்ளை வாரணனார் முதலியார்



(14.01.1917 - 13.06.1988)

தமிழறிஞர் க. வெள்ளை வாரணனார்: அண்ணாமலைப் பல்கலைக்கழத்திலிருந்து தமிழிசை துறையில் பணி ஆற்றியவர். இயற்றமிழோடு, இசைத்தமிழின் நுணுக்கங்களை அறிந்த நுண்ணறிவாளராகத் திகழ்ந்தவர். யாழ்நூல் விபுலானந்த அடிகளாரால் உருவாக்கப்பட உதவியவருள் இவரும் ஒருவர். இவர் 'இசைத் தமிழ்' என்ற அரிய நூல் ஒன்றைத் தந்துள்ளார். இந்நூல் முத்தமிழ்த் திறன், இசை நூல் வரன்முறை, இசையமைதி, இசைத் தமிழ் இலக்கியம், இசைக் கருவிகள், இசைப்பாட்டின் இலக்கணம், இசைத் தமிழ்ப் பயன், தமிழிசை இயக்கம், இசைத்தமிழ் வளர்ச்சிக்கு ஆக்கமாகும் பணிகள் என்ற ஒன்பது இயல்களைக் கொண்டுள்ளது.

இளமை

தஞ்சை மாவட்டம் குடந்தைக்கு அருகிலுள்ள திருநாகேசுவரத்தில் ஓர் நவவீரர் வம்சமான செங்குந்தர் கைக்கோள முதலியார் குடும்பத்தில் கந்தசாமி முதலியார் - அமிர்தம் அம்மையார் தம்பதியருக்கு மகவாக 1917ம் ஆண்டு ஜனவரி 14ம் தேதி வெள்ளைவாரணனார் பிறந்தார். தம் இளமைக் கல்வியை திருநாகேசுவரத்தில் கற்ற வெள்ளைவாரணனார், திருப்பெருந்துறை மாணிக்கவாசகர் தேவாரப் பாடசாலையில் மாணாக்கராகச் சேர்ந்து திருமுறைகளை இசையோடு கற்றுத் தேர்ச்சி பெற்றார்.

பின்னர் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் வித்துவான் படிப்பில் சேர்ந்து 1935 இல் வித்துவான் தேர்வில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார். 1935-37 இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ஆய்வு மாணவராகச் சேர்ந்து, 'தொல்காப்பியம் - நன்னூல் எழுத்ததிகாரம் ஒப்பீடு' என்னும் ஆய்வேட்டினை எழுதி முடித்தார்.வெள்ளைவாரணனார் 1938 முதல் 1943 வரை தஞ்சாவூர் கரந்தைத் தமிழ்க் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணிபுரிந்தார். 1939 ஆம் ஆண்டு பொற்றடங்கண்ணி அம்மையாரை வாழ்க்கைத் துணைவியாக ஏற்றார்.

பணி

1943 இல் வெள்ளைவாரணனார் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் விரிவுரையாளராகச் சேர்ந்தார். 1962 இல்

இவரின் புலமை நலனைக் கருத்தில் கொண்டு விதிகளைத் தளர்த்தி பல்கலைக்கழகம் இவருக்கு இணைப்பேராசிரியர் பதவி வழங்கியது.

1977 ஆம் ஆண்டு துறைத்தலைவர் பொறுப்பை ஏற்றார். பல்கலைக்கழக ஆளவை மன்றம், ஆட்சிக்குழு ஆகியவற்றில் உறுப்பினராகவும் பணிபுரிந்தார். தம் 62 இம் வயது வரை அங்குப் பணியாற்றி 1979 இல் ஓய்வு பெற்றார்.

1979 முதல் 1982 ஆம் ஆண்டு வரை மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் சிறப்புப் பேராசிரியராகவும், துறைத்தலைவராகவும் பணியாற்றினார். பேராசிரியர் க.வெள்ளைவாரணனார் மாணாக்கரின் அன்புக்குரியவராகத் திகழ்ந்தார். இவர் தமிழ் இலக்கியம், இலக்கணம், திருமுறைகள், சைவசித்தாந்தம் ஆகியவற்றைக் கற்றுத் துறைபோய நற்றமிழ் அறிஞரகத் திகழ்ந்தார்.

நூல்கள்

வெள்ளைவாரணனாரின் உரை நூல்கள் அவரின் நுண்மாண் நுழை புலத்தினைக் காட்டுவன. விபுலானந்தரின் யாழ் நூலுக்கு இவர் எழுதியுள்ள முன்னுரை இவரின் இசைப் புலமைக்குச் சான்றாக அமைந்துள்ளது. வெள்ளைவாரணனார் எழுதிய நூல்கள் சில

இலக்கண நூல்கள்

தமிழ் இலக்கிய வரலாறு - தொல்காப்பியம்

தொல்காப்பியம் - நன்னூல் எழுத்ததிகாரம்

தொல்காப்பியம் - நன்னூல் சொல்லதிகாரம்

தொல் - பொருள் உரைவளம் (ஏழு தொகுதிகள்)

சங்க இலக்கியம் சார்ந்த நூல்கள்

குறிஞ்சிப்பாட்டாராய்ச்சி

சங்ககால தமிழ் மக்கள்

சைவ சமயம் சார்ந்த நூல்கள்

திருவுந்தியார்

திருக்களிற்றுப்படியார்

சேக்கிழார் நூல்நயம்

பன்னிரு திருமுறை வரலாறு

தில்லைப் பெருங்கோயில் வரலாறு

திருவருட்பாச் சிந்தனை

உரை நூல்கள்

தேவார அருள்முறைத் திரட்டுரை

பிற

காக்கை விடு தூது என்னும் படைப்பிலக்கியத்தையும்,இசைத்தமிழ், நாடகத்தமிழ் சார்ந்த நூல்களையும் எழுதியுள்ளார். இவரது நூல்களுள் சில நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன.

நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்கள்

அற்புதத் திருவந்தாதி
இசைத்தமிழ்
காக்கை விடு தூது
பன்னிரு திருமுறை வரலாறு
பன்னிரு திருமுறை வரலாறு - இரண்டாம் பகுதி
சைவ சித்தாந்த சாத்திர வரலாறு
சங்ககாலத் தமிழ் மக்கள்
தில்லைப் பெருங்கோயில் வரலாறு
திருமந்திர அருள்முறைத் திரட்டு
திருத்தொண்டர் வரலாறு
திருவருட்பாச் சிந்தனை
திருவுந்தியார் திருக்களிற்றுப்படியார்
தொல்காப்பியப் பொருளதிகார ஆய்வு
தொல்காப்பியம் களவியல் உரைவளம்
தொல்காப்பியம் கற்பியல் உரைவளம்
தொல்காப்பியம் மெய்ப்பாட்டியல் உரைவளம்
தொல்காப்பியம் நன்னூல் - எழுத்ததிகாரம்
தொல்காப்பியம் நன்னூல் - சொல்லதிகாரம்
தொல்காப்பியம் பொருளியல் உரைவளம்
தொல்காப்பியம் புறத்திணையியல் உரைவளம்
தொல்காப்பியம் உவமையியல் உரைவளம்
தொல்காப்பியம் வரலாறு
திருவருட் பயன்
தொல்காப்பியம்-செய்யுளியல் உரைவளம்
தொல்காப்பியம்-மரபியல்-உரைவளம்
கவிதை நூல்கள்.

சிறப்புகள்

தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் இவருக்கு 1985 இல் கலைமாமணி விருதை வழங்கியது. தமிழ் நாட்டிலுள்ள பல்வேறு இலக்கியம் மற்றும் சமய அமைப்புகளும், பல்கலைக்கழகங்களும் வெள்ளைவாரணனாருக்குப் பல்வேறு விருதுகளை வழங்கி பெருமை சேர்த்துள்ளன.

சித்தாந்தச் செம்மல்
தமிழ்ப் பெரும்புலமைச் சான்றோர்
திருமுறை உரைமணி
செந்தமிழ்ச் சான்றோர்
தமிழ்மாமணி
சிவகவிமணி
திருமுறைத் தெய்வமணி
தமிழ்ப் பேரவைச் செம்மல்

ஆகிய விருதுகள் பல்வேறு ஆண்டுகளில் இவருக்கு வழங்கப்பட்டன.

மறைவு

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும்போது வெள்ளைவாரணனாருக்கு உடல் நலம் குன்றியது.எனவே தில்லை சென்று தங்கி வாழ்ந்திருந்த வெள்ளைவாரணனார் 1988 ஆம் ஆண்டு ஜூன் 13 ஆம் நாள் இவ்வுலகை விட்டு மறைந்தார்.

சிதம்பரம் தில்லைப் பெருங்கோயில் (நடராசர் கோயில்), சைவ சமயத்தின் மிக உயர்ந்த வழிபாட்டுத் தலமாக, "கோயில்" என்றே அழைக்கப்படும் பெருமையுடையது. தில்லை மரங்கள் அடர்ந்த காடாக இருந்ததால் தில்லைவனம் எனப்பட்டு, பின்னர் புலியூர், பெரும்பற்றப்புலியூர் என அழைக்கப்பட்டது. சிவபெருமான் ஆடல் வல்லானாக (நடராசர்) ஆனந்தத் திருக்கூத்து ஆடும் இடமாகச் சிற்றம்பலம் திகழ்கிறது. பல்லவர், சோழர், பாண்டியர், நாயக்கர் ஆட்சிக்காலங்களில் விரிவுபடுத்தப்பட்ட, கல்வெட்டுச் சான்றுகள் நிறைந்த ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க திருத்தலம் இது.


தில்லைப் பெருங்கோயிலின் முக்கிய வரலாற்றுக் குறிப்புகள்:

- ***புராணக் பின்னணி:*** சிவபெருமான் தேவதாரு வனத்தில் வாழ்ந்த முனிவர்களுக்கு ஐந்தொழில் இன்பத்தைக் கற்பிக்கும் பொருட்டு, புலிக்கால் முனிவர் (வியாக்ரபாதர்) மற்றும் பதஞ்சலி முனிவர் வேண்டுகோளுக்கிணங்க, இங்கு ஆனந்தத் தாண்டவம் புரிந்தார்.
- ***பழங்காலப் பெருமை:*** இது பழங்காலத்தில் "திருமூலட்டானம்" என்று அழைக்கப்பட்டதோடு, தில்லை வாழந்தணர்கள் எனப்படும் தீட்சிதர்களால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.
- ***சோழர் திருப்பணி:*** முதலாம் பராந்தக சோழன் காலத்தில்தான், கூத்தப்பெருமானின் சபையான 'பொன்னம்பலம்' (கனகசபை) பொன்வேயப்பட்டது.
- ***கலை மற்றும் அமைப்பு:*** இக்கோயில் கட்டடக்கலை, சிற்பக்கலை மற்றும் ஓவியக்கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும், குறிப்பாக 108 பரதநாட்டிய முத்திரைகள் இங்கு செதுக்கப்பட்டுள்ளன.
- ***கோவிந்தராசப் பெருமாள் சந்நிதி:*** தில்லை நடராசர் கோயிலுக்குள்ளேயே திருமால், கோவிந்தராசப் பெருமாளாக வீற்றிருக்கும் சந்நிதி உள்ளது, இது பிற்காலத்தில் விரிவுபடுத்தப்பட்டது.
- ***தல சிறப்புகள்:*** ஞானப்பாலுண்ட திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் உள்ளிட்ட நாயன்மார்களால் பாடல் பெற்ற சிவத்தலங்களில் இது மிக முக்கியமானது.

இக்கோயில் திருவாதிரை திருவிழாவிற்குப் புகழ்பெற்றது, மேலும் தினமும் காலை ஆறு மணிக்குக் கோயில் நடை திறக்கப்பட்டு, பாற்சாலை (பள்ளியறை) பூஜை சிறப்பாக நடைபெறும்.

க. வெள்ளைவாரணனார் எழுதிய
தில்லைப் பெருங்கோயில் வரலாறு

https://www.projectmadurai.org/pm_etexts/utf8/pmuni0948.html



Source: நூல் பற்றிய விவரங்கள்
நூல் : தில்லைப் பெருங்கோயில் வரலாறு
ஆசிரியர்: கலைமாமணி பேராசிரியர் திரு. க. வெள்ளைவாரணனார்
பதிப்பு எண்/ ஆண்டு .. இரண்டு, 1983 முதல்பதிப்பு: 1957
பக்கம்: 180
விலை : ரூ. 5.00
பதிப்புரிமையுடையது : 1988
நூல் பதிப்பித்ததும் கிடைக்குமிடமும்: .. தில்லைத் தமிழ் மன்றம்,
9, கனகசபைநகர், சிதம்பரம் 608 001
அச்சிட்டோர்: சிவகாமி அச்சகம், அண்ணாமலை நகர்-608003

பதிப்புரை

திருச்சிற்றம்பலம்

சிவகாமியம்மை காணத் திருச்சிற்றம்பலத்தில் ஆனந்தத் திருக்கூத்தினை நிகழ்த்தியருளும் நடராசப்பெருமான் திருக்கோயில் திருப்பணி இனிது நிறைவேறி மகா கும்பாபிஷேகம் நிகழும் போது தில்லைப் பெருங்கோயிலின் வரலாறு கல்வெட்டுச் சான்றுகளோடும் இலக்கியச் சான்றுகளோடும் எழுதப் பெற்று வெளிவருதல் வேண்டும் என்பது எங்களது விருப்பம். எங்களது வேண்டுகோட்கிசைந்து 'தில்லைப் பெருங்கோயில் வரலாறு' என்னும் இந்நூலை எழுதியுதவியவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் முன்னாள் தலைவர் திருமுறை ஆராய்ச்சிக்கலைஞர் கலைமாமணி பேராசிரியர் திரு. க. வெள்ளைவாரணனார் ஆவார். அவர்கட்கு உதவியாயிருந்தவர் பச்சையப்பன் பள்ளி முன்னாள் தமிழாசிரியர் புலவர் திரு வீரநாராயணன் ஆவர். உடனிருந்து உதவியவர் அண்ணாமலைப் பல்கலைக் கழக வரலாற்றுத் துறைத் தலைவர்

டாக்டர் எம். எஸ். கோவிந்தசாமி அவர்களாவர். விரைவில் வனப்புற அச்சிட்டுக் கொடுத்தோர் அண்ணாமலை நகர் சிவகாமி அச்சகத்தார். இவர்கள் எல்லோர்க்கும் என பாராட்டும் நன்றியும் என்றும் உரியவாகும்.

9. கனகசபைநகர், சிதம்பரம் -608001 இங்ஙனம்
10-02-1987 G. வாகீசம்பிள்ளை
தலைவர், தில்லைத் தமிழ் மன்றம்

இரண்டாம் பதிப்புரை

சிவமயம் திருச்சிற்றம்பலம்

‘தில்லைப் பெருங்கோயில் வரலாறு' மக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்ற நூல். காரணம், அது தலபுராணச்செய்திகளுடன் வரலாற்று உண்மைகளையும் மற்றும் இலக்கியச் செய்திகளையும் தெரிவிப்பதே.

இதுபோன்ற நூல் ஒன்றினை, மலிவான விலையில் தயாரித்து, அதனைத் தமிழ் மக்கள் அனைவரும் படித்துப்பயன் பெற வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்தவர், தில்லைத் தமிழ் மன்றத் தலைவரும், தில்லைப்பெருங்கோயில் திருப்பணிக் குழுவின் செயலாளராக விளங்கிய திருப்பணிச் செல்வர் திரு ஜி. வாகீசம்பிள்ளை அவர்கள். கோயிலின் குடமுழுக்கை 11--2--87ல் பலரும் போற்ற நிகழ்த்திய அவர்கள், எண்ணிய எண்ணியாங்கு எய்தி குடமுழுக்கு விழாவின்போது. இந்நூலை வெளியிட்டு மகிழ்ந்தார்கள்.

இந்நூல் எழுதும் பொறுப்பை தமிழ் மூதறிஞர், பேராசிரியர் திரு. க. வெள்ளைவாரணனார் அவர்களிடம் மன்றத் தலைவர் அவர்கள் ஒப்படைத்தார்கள், என்றும் போற்றத்தக்க வகையில் எவ்வித கைம்மாறும். கருதாது, தமிழுக்கும், சைவத்துக்கும் அளப்பரிய தொண்டுகள் செய்த பேராசிரியர் அவர்கள் தாம் ஏற்ற பொறுப்பை தம் உடல்நிலையைக் கூடக்கருதாது, மிகச் செம்மையாகச் செய்து முடித்தார்கள். முதற்பதிப்பு முடியுந் தறுவாயில், அதனை மேலும் செம்மைப்படுத்தி, இரண்டாவது பதிப்புக்காக. அச்சுக்குக் கொடுக்கும் நிலையில், நூலாசிரியர் சிவப்பேறுபெற்றார்.

மன்றத்தலைவர் அமரர் ஜி. வாகீசம்பிள்ளை மற்றும் நூலாசிரியர் அமரர் க. வெள்ளைவாரணனார் செய்த பணிகளைத் தொடர மன்றம் முடிவு செய்தது. அதற்கேற்ப இரண்டாம் பதிப்பு வெளியாகிறது. இப்பதிப்பில் தில்லைத் 'திருமடல்கள்' என்ற புதிய பகுதி பிற்சேர்க்கையில் இணைக்கப்பட்டுள்ளது. இந் நூலை ஆங்கிலத்தில் தொழிபெயர்ப்புச் செய்து வெளியிட வேண்டும் என்ற எண்ணம் உள்ளது. தில்லை அம்பலவன் திருவருளால் விரைவில் செயல் கூடும்.

தில்லை நடராசப் பெருமானின் வடிவத்தை முகப்புப் பட்டத்திற்காக அழகாக வரைந்து உதவிய மாரியப்பா நகர் ஓவிய ஆசிரியர் திரு. K.N. சேதுராமன், நல்ல முறையில் இரண்டாம் பதிப்பையும் அச்சிட்ட அண்ணாமலை நகர் சிவகாமி அச்சகத்தார், இவ்விரண்டாம் பதிப்பை வெளியிடுவதற்கு உறுதுணையாக இருந்த அன்பர்கள் திரு க. சுவாமிநாதன் மற்றும் திரு இரத்தின சம்பந்தம் ஆகியோருக்கு எங்கள் நன்றியை உரிமையாக்கிக் கொள்கிறோம்.

இந்நூலைப் படித்து, பொன்னம்பலவனின் தண்ணருளை பெற வேண்டுகிறோம்.

9, கனகசபை நகர். சிதம்பரம் இங்ஙனம்
09-12-88 S. திருநாவுக்கரசு
செயலாளர், தில்லைத்தமிழ்மன்றம்,

பொருளடக்கம்

(I) தில்லை நடராசர் திருக்கோயிலில் கோவிந்தராசப்பெருமான் இடம் பெற்ற வரலாறு
(II) தில்லையில் ஆடல்புரியும் கூத்தப்பெருமான் திருவுருவம் இடம்பெயர்ந்து மீண்டும் எழுந்தருளினமை
(III) சிவாலய தரிசனவிதி
(IV) சிதம்பரத்திற்குரிய நூல்கள்
(V) தில்லைத்திருமடங்கள்



கரந்தைப் புலவர் கல்லூரி

https://karanthaijayakumar.blogspot.com/2012/06/blog-post.html

உலகின் ஐந்தாம் தமிழ்ச் சங்கம் என்று போற்றப்படும் கரந்தைத் தமிழ்ச் சங்கம் தொடங்கப் பெற்ற ஆண்டு 1911 ஆகும். தமிழ் வளர்ச்சிப் பணிகளையும், கல்வி வளர்ச்சிப் பணிகளையும் தனது இரு கண்களெனக் கருதிய கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில்,1916 ஆம் ஆண்டு **கரந்தைத் தமிழ்ச் சங்கச் செந்தமிழ்க் கைத் தொழில் கல்லூரியானது** தொடங்கப் பெற்றது.

தமிழோடு கைத் தொழில்களையும் கற்றுக் கொடுக்கும்படியான கலாசாலைகளை ஏற்படுத்துதலே பயன் விளைவிக்கும் என்று தமிழவேள் உமாமகேசுவரனார் எண்ணினார். இக்கல்லூரியில் பயின்று வெளிவரும் மாணவர்கள், அரசு வேலை வாய்ப்புகளை மட்டுமே நம்பியிராமல், சொந்தமாகத் தொழில் செய்து நாட்டை வளமாக்க வேண்டும் என்பதே உமாமகேசுவரனாரின் விருப்பமாகும். எனவே எட்டாம் வகுப்பு வரை பயிற்று விக்கப் பட்ட, இக்கல்லூரியில், நெசவு, நூல் நூற்றல், பாய் முடைதல், மரவேலைகள், நூற் கட்டு, அச்சுத் தொழில் முதலியனவும் கற்றுத் தரப்பெற்றன.

கரந்தைத் தமிழ்ச் சங்கச் செந்தமிழ்க் கைத்தொழில் கல்லூரியில் பயின்று, மேற் படிப்பைத் தொடர விரும்பும் மாணவர்களுக்காக ஒரு தனித் தமிழ்க் கல்லூரியினை நிறுவிட உமாமகேசுவரனார் விரும்பினார்.



ஞானியார் அடிகள்

கரந்தைத் தமிழ்ச் சங்கம் தொடங்கப் பெற்ற நாள் தொடங்கி, சங்கத்தை அண்டாது, அணுகாது விலகியிருந்தது செல்வம் மட்டுமே. போதிய நிதி வசதியின்மையால், உமாமகேசுவரனாரின் கல்லூரிக் கனவானது, ஆண்டுகள் பல உருண்டோடியும் கானல் நீராகவே நீடித்தது.

சற்றும் அயராத உமாமகேசுவரனாரின் தொடர் முயற்சிகளின் விளைவாக, 1938 ஆம் ஆண்டு, கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் **வெள்ளி விழாவின்** போது தனித் தமிழ்க் கல்லூரி ஒன்றினை, **கரந்தைப் புலவர் கல்லூரி** என்னும் பெயரில் தொடங்குவது என்று தீர்மானிக்கப் பட்டது.

கரந்தைத் தமிழ்ச் சங்கம் தொடங்கப் பெற்ற ஆண்டு 1911 ஆகும். எனவே 1936 ஆம் ஆண்டிலேயே வெள்ளி விழாவினைக் கொண்டாடியிருக்க வேண்டும். ஆனால் பொருளாதார வசதி இடம் கொடுக்காததால், இரண்டு ஆண்டுகள் தாமதமாகவே வெள்ளி விழா கொண்டாடப் பெற்றது.

திரு **க.வெள்ளைவாரணன்** என்பார் இப் புலவர் கல்லூரியின் முதல் ஆசிரியராக நியமனம் செய்யப் பெற்றார். பின்னாளில் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் இலக்கியத் துறைத் தலைவராய் அமர்ந்து, அரும் பணிகள் பல ஆற்றிய பேராசிரியர் வெள்ளைவாரணனார் இவர்தான்.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் வெள்ளி விழாவானது, 1938 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15, 16 மற்றும் 17 ஆகிய தேதிகளில், **திருக்கோவலூர் ஆதீனம், திருப்பாதிரிப் புலியூர் ஞானியாரடிகள் சிவ சண்முக மெய்ஞ்ஞான சிவாச்சாரிய சுவாமிகளின்** சீரிய தலைமையில், சங்கத் தமிழ்ப் பெருமன்றத்தில், தமிழ் மணம் கமழ நடைபெற்றது. தமிழ் நாட்டின் பல இடங்களில் இருந்தும், இலங்கை, மைசூர் முதலிய நாடுகளிலிருந்தும் தமிழன்பும், தமிழறிவும், தமிழ்த்

தொண்டாற்றலுமுடைய தமிழ்ப் பெருமக்கள் சுமார் ஐயாயிரம் பேர் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

கரந்தைப் புலவர் கல்லூரி



ந.மு.வேங்கடசாமி நாட்டார்

வெள்ளி விழாவின் இரண்டாம் நாளான 16.4.1938 சனிக் கிழமை காலை 8.00 மணிக்கு தமிழ்ப் பெருமன்றத்தில் கடவுள் வணக்கமும், தமிழ்த் தாய் வாழ்த்தும் பாடப்பெற்ற பின் கரந்தைப் புலவர் கல்லூரியின் தொடக்க விழா தொடங்கியது.

விழாத் தலைவர் **திருப்பாதிரிப் புலியூர் ஞானியார் அடிகள்** அவர்கள், தம் பொருளுரைகளை அழகு மிகத் திரட்டி கல்லூரியினைத் திறந்து அருளினார்கள். அப்போது **நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார்** அவர்கள்,

நன்மா ணவராகும் வண்டர் நனிபயின்று
பன்மான் கலைத்தேன் பருகுமா - மண்மான்
கரந்தைத் தமிழ்ச் சங்கச் கல்லூரிப் பூங்கா
பரந்தொளிர்ந்து வாழியார்இப் பார்

எனப் பாடி வாழ்த்தினார்.


கல்லூரிக் கட்டிடத்தில் அலங்கரிக்கப் பெற்று வைக்கப்பெற்றிருந்த தமிழ்க் கடவுள் முருகன் திருவுருவத்திற்கு வழிபாடு செய்யப் பெற்றது. தொடர்ந்து ஞானியாரடிகளும் மற்றவர்களும் வகுப்பறைக்குச் சென்றனர். நாதமுனி என்னும் பெயருடைய மாணவர் உட்பட பத்தொன்பது மாணவர்களுடன் புதிய கல்லூரியின் முதல் வகுப்பானது தொடங்கப் பெற்றது.



வெள்ளைவாரணனார்

ஞானியார் அடிகள் அவர்கள் வித்துவான் வெள்ளைவாரணன் அவர்களை மாணவர்களுக்கு அறிமுகப் படுத்தி, தமிழ் கற்பிக்கத் தொடங்குமாறு வேண்டினார். வெள்ளைவாரணன் அவர்களும், திருக்குறளின் தலைக்குறளாகிய அகர முதல என்னும் அருமைத் திருக்குறளைக் கற்பித்தார். அவரைத் தொடர்ந்து ஞானியாரடிகள் அவர்கள் புதிதாக தொடங்கப் பெற்றுள்ள கல்லூரியை வாழ்த்தி, அகரமுதல எனத் தொடங்கும் திருக்குறளின் பருப் பொருளும், நுண் பொருளும் இனிது விளக்கினார்.

தமிழ் வளர்ச்சிக்காகப் பெருந்தொண்டு புரிந்து வரும் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் நோக்கங்களைக் கண்டு மகிழ்வடைந்த பலரும், கல்லூரியானது தழைத்து சிறந்தோங்க நன்கொடைகளை வழங்கினர். திருச்சிராப்பள்ளி **திருவாளர் டி.எஸ். பொன்னுசாமி பிள்ளை** என்பார், தாம் நடத்தி வருகின்ற அறக்கட்டளையின் வருவாயினை கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கு வழங்க தரும சாசனம் எழுதி முடிக்க எண்ணியிருப்பதாக, விழா மேடையிலேயே அறிவித்தார்.



சிவ, குப்புசாமி பிள்ளை

மாணவர்களுக்கு இலவச கல்வி, இலவச விடுதி வசதி, இலவச உணவு வசதிகளும் ஏற்பாடு செய்து தரப்பெற்றன.கரந்தைத் தமிழ்ச் சங்கச் செந்தமிழ்க் கைத் தொழில் கல்லூரியின் தலைமையாசிரியரான திரு **சிவ. குப்புசாமி பிள்ளை** அவர்கள், கரந்தைப் புலவர் கல்லூரியின் மேற்பார்வையாளர் பணியினை ஏற்று தமிழ் பயிலும் மாணவர்களின் மேம்பாட்டிற்கு அயராது பாடுபட்டார்.

தமிழவேள் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, குடந்தை பாணாதுறை உயர் நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகத் தொண்டு செய்து வந்தவரும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் ஆராய்ச்சிப் பகுதியில் வரலாற்றுத் துறையில் பல ஆண்டுகள் தொண்டு செய்து ஓய்வு பெற்றவரும், தமிழ் நாட்டின் தலைசிறந்த கல்வெட்டு ஆராய்ச்சியாளருமாகிய திரு **சதாசிவ பண்டாரத்தார்** அவர்கள்,சனிக் கிழமைகள் தோறும், தனது சொந்த செலவிலேயே, கரந்தைக்கு வந்து, கல்வெட்டு பற்றிய விளக்கங்களை மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுத்தார்.



சதாசிவ பண்டாரத்தார்

தமிழவேளும் தனது பல்வேறு பணிகளுக்கு இடையே நேரம் ஒதுக்கி, ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் காலை 9.00 மணி முதல் 11.00 மணி வரை, **டாக்டர் கால்டுவெல்** என்னும் மேல்நாட்டு அறிஞரால் எழுதப் பெற்ற, இன்றளவும் உலக மொழி வரலாற்றில், திராவிட மொழிகளுள் தமிழ் மொழிக்கு முதலிடம் வழங்கிய, **திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்** என்னும் அரிய பெரிய ஆங்கில நூலை, மாணவர்களுக்கு மொழிபெயர்த்து தக்க விளக்கங்களோடு போதித்து வந்தார்.

கல்லூரி ஒன்றை நடத்துவது என்றால் போதிய பொருள் வருவாய் வேண்டுமல்லவா? சங்கத்தை நடத்துவதற்கே போதிய பொருள் இல்லாதபோது, கல்லூரியினை நடத்துவது எவ்வாறு இயலும்? ஆனாலும் தொடங்கிய பணியினை இடையிலேயே நிறுத்தி விடுவது இழுக்காகிவிடுமல்லவா? எனவே

மனம் தளராத உமாமகேசுவரனார் தமிழ்ப் பெருமக்களுக்கு கீழ்க்கண்ட ஒரு வேண்டுகோளினை விடுத்தார்.

கரந்தைத் தமிழ்ச் சங்கம் இப்போது தமிழ்நாடு முற்றுமே மதிக்கத்தகும் அரும்பணியை மேற்கொண்டிருக்கிறது. கரந்தைத் தமிழ்க் கல்லூரி, முதல் வகுப்புடன் அரும்பியிருக்கின்றது. மேலும் நான்கு வகுப்புகள் நாளடைவில் தோன்றி முற்றுப் பெற வேண்டிய நிலையில் இருக்கிறது. இதன் இன்றியமையாத அங்கங்களாகிய இசை, ஓவியம், மருத்துவம், சிற்பம் போன்ற தொழிற் கலைகளும் ஈண்டு முகிழ்ததுப் பிஞ்சு, காய் கனிகளாகி நற்பயன் நல்க வேண்டும். இவ்வெண்ணங்கள் சிறு அளவிலாவது உருப்பெற வேண்டுமானால் நூறு மாணவர்களுக்காவது, உண்டியும், உறையுளும் தருதற்கான மாணவர் இல்லமும், பத்து ஆசிரியர்களாகினும் பணி செய்தற்குரிய வசதிகளும் அமைக்கப்பட வேண்டும். ஆண்டு தோறும் ரூபாய் ஐயாயிரத்திற்குக் குறையாத வருவாய் தட்டில்லாது வந்து கொண்டே இருத்தல் வேண்டும். இதுபோது தொடங்கியிருக்கும் முதல் வகுப்பில் பத்தொன்பது மாணவர்கள் சேர்ந்திருக்கின்றனர். திருச்சி, நெல்லை, கோவை, வட தென் ஆற்காடுகள், ஆய பிற மாவட்டங்களில் இருந்து வந்தவர் ஒன்பதின்மர். யாழ்பாணத்து மாணவர் ஒருவர் வருவாரென்று எதிர்பார்க்கப் படுகிறது. மலேயா நாட்டிலிருந்தும் விண்ணப்பம் வந்துள்ளது. இவர்களின் பன்னிருமாணவர்கள் சங்கத்தார் அமைத்திருக்கும் இல்லத்தே இருந்தும், ஏனோர் வெளியே இருந்தும் கல்வி பயின்று வருகின்றனர். இதனை உய்த்து நோக்குவோர் இக்கல்லூரி தமிழ் நாட்டிற்கு உரியதெனவும், இதனைப் பேணி வளர்த்தல் தத்தம் கடமை எனவும் தமிழன்பர்கள் கருதுவர் என்று எண்ணுகிறோம். தமிழ்ப் புலமையும், தொழிற் கலையும் ஒருங்கே பயிற்றப்படும் கல்வி முறை சாலச்சிறந்த நன்முயற்சியாகும். இம் முயற்சி உரம் பெறுவதற்கு, இலக்கிய இலக்கண நூல்களேயன்றிக் கலை நூல்களையும் எளிய விலைக்கு வெளியிடுதல் வேண்டும். இத்தகைய பொறுப்புள்ள வேலைகளை மேற்கொள்ளவும், செவ்வனம் இயற்றவும் அறிவாளிகள், செல்வர்கள், அன்பர்கள் ஆகிய அனைவரின் துணையும் இன்றியமையாது வேண்டப்படுகிறது.

இவ்வேண்டுகோள் விரும்பியவாறு பலனளிக்கவில்லை. ஆயினும் கல்லூரி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டுதானிருந்தது. கல்லூரியானது இரண்டாம் ஆண்டில் அடி எடுத்து வைத்தபோது, மேலும் ஒரு ஆசிரியர் நியமனம் செய்யப் பட்டார். சங்கத்தின் புகழ்பாடும் நல்ல கவிஞராகவும், தமிழையும் தமிழ் நாட்டு அரசியலையும் அறியாது சோம்பிக் கிடந்த தமிழ் மக்களிடையே, உணர்ச்சி ஊற்றெடுக்கச் செய்யும் வகையில் சொற்பொழிவாற்றும் நாவன்மை உடையவருமாகிய திரு **கோ.வி.பெரியசாமிப் புலவர்** அவர்கள் இரணட்வது விரிவுரையாளராகப் பணியில் சேர்ந்தார்.

பேரிடியாய் விழுந்த தடை

1940-41 ஆம் ஆண்டு கோடை விடுமுறைக்குப் பின் மூன்றாமாண்டில் கல்லூரியானது காலடி எடுத்து வைப்பதற்குள், பேரிடியாய் **தடை** என்னும் உத்தரவு ஒன்று சென்னைப் பல்கலைக் கழகத்தால் பிறப்பிக்கப் பெற்றது.

கரந்தைப் புலவர் கல்லூரியை சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைக்க முடியாது என்று சென்னைப் பல்கலைக் கழகப் பதிவாளர் அறிவித்து விட்டார்.

காரணம். ரூபாய் ஐம்பதாயிரம் தொகையினை இணைப்புக் கட்டணமாய் செலுத்தியிருக்க வேண்டும் அல்லது ரூபாய் ஐம்பதாயிரம் பொறுமானமுள்ள சொத்துக்களுக்கு உரிய பத்திரங்களைப் பல்கலைக் கழகத்தில் சமர்ப்பித்திருக்க வேண்டும். கரந்தைத் தமிழ்ச் சங்கமோ, இரண்டில் எதையுமே நிறைவேற்றும் நிலையில் இல்லை. ஒரு வருடம் கல்லூரியினை நடத்துவதற்கான ரூபாய் ஐயாயிரத்திற்கே வழி இல்லாதபோது, ரூபாய் ஐம்பதாயிரத்திற்குச் சங்கம் எங்கே போகும். எனவே கரந்தைப் புலவர் கல்லூரியை சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைப்பதோ, அங்கீகாரம் வழங்குவதோ முடியாது.கல்லூரியினை உடனே மூடுங்கள் என்று சென்னைப் பல்கலைக் கழகம் உறுதியாய் அறிவித்தது.

கரந்தைப் புலவர் கல்லூரி மூடப்பட்டது. கல்லூரியில் பயின்ற மாணவர்கள் திசைக்கொருவராய் சென்றனர். அகப்பட்ட தொழிலில் அமர்ந்தனர் பலர். சிலர் வெள்ளத்தில் அகப்பட்டவன் துரும்பைப் பிடித்துக் கரையேறுதல் போல, தனியே கல்லூரியும், ஆசிரியரும் இல்லாவிட்டாலும், தனிமையில் பயின்று தமிழ்க் கலைகளில் அறிஞராயினர். சிலர் வேலையின்றித் தவித்தனர்.

எடுத்த செயலினை எப்பாடுபட்டாவது செய்து முடிக்கும் திறன் வாய்ந்த உமாமகேசுவரனார் மட்டும் உள்ளம் தளர்ந்தாரில்லை. தமிழ்ப் பெருமக்களை நோக்கி, **கரந்தைப் புலவர் கல்லூரிக்குப் போதிய முதற்பொருள் இன்மையான் சென்னைப் பல்கலைக் கழகத்தார் ஒப்ப மறுக்கின்றனர். தமிழ் நாட்டின் எல்லைக்குள் ஆங்கிலம் போன்ற பிறமொழிகளின் வளர்ச்சியைக் கருதி உழைக்கும் கலைக்கூடங்கள் எத்தனை? அவற்றிற்காகப் பணி செய்து செழுமையுடன் தருக்குற்று வாழும் கணக்காணர் எத்துணையர்? இந்நிலையில் தமிழ் மொழி ஒதுக்கிடம் பெறுவதும், தமிழ்ப் புலவர்கள் வீணர்கட்கு எளியராய் அஞ்சி வாழ்வதும் இழிவன்றோ? தமிழ் மக்கள் இப் புலவர் கல்லூரிக்குப் பொருளுதவி புரிந்து தம் கடனாற்றுவார்களாக** என மீண்டும் ஒரு முறை வேண்டுகோள் விடுததார்.

தஞ்சை வட்டக் கழகத் தலைவராக செல்வாக்குடைய பதவியினையும், சிறந்த வழக்கறிஞர் என்னும் பெயரினையும் பெற்றிருந்த தமிழவேள் அவர்களால், தம்மிடம் ஆதரவு நாடிவரும் செல்வந்தர்களிடமிருந்து, எளிதில் பெரும் பொருளைத் திரட்டியிருக்க முடியும். ஆனாலும் அதனைச் செய்தாரில்லை. அதற்கும் அவரே காரணத்தைக் கூறுகிறார். கேளுங்கள். **பொய்யும் புரட்டும் உடையவர்கள்கால் பெறும் பொருள் நம் சங்கத்திற்கு வேண்டியதில்லை. தமிழ் வளர வேண்டும் என்ற விருப்பத்துடன் யாரேனும் ஒரு காசு கொடுத்தாலும் அதனைப் பெரும் தொகையாக ஏற்று மகிழ்வோம்** என்றார்.

சங்கநிதி பதுமநிதி இரண்டுந் தந்து
தரணியொடு வானாளத் தருவ ரேனும்
மங்குவார் அவர்செல்வம் மதிப்பேம் அல்லேம்
மாதமிழுக் கேகாந்தர் அல்லராகில்
அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோ யராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்
தங்குபுகழ்ச் செந்தமிழ்க்கோர் அன்ப ராகில்

தமிழ் மக்களிடம் இருமுறை கோரிக்கை வைத்தும் பயனில்லை. ***இப்புலவர் கல்லூரியில் பயின்று புலவர் பட்டத்துடன் வெளிவரும் முதல் மாணவனைக் கண்ணாரக் கண்டால்தான் எனது இப்பிறவி முழுமைபெறும். புலவர் பட்டத்துடன் வெளிவரும் மாணவனைக் கண்ட அடுத்த விநாடியே எனது உயிர் பிரியுமானால் மிகவும் மகிழ்வேன்*** என்று தமிழன்பர் சிலரிடம் கூறி வருந்திய உமாமகேசுவரனாருக்கு, வெள்ளி விழாவின் போது தனது உறவினரான, **திருச்சி டி.எஸ்.பொன்னுசாமி பிள்ளை** அவர்கள் தனது அறக்கட்டளையின் வருவாயினை சங்கத்திற்காக எழுதி வைக்க முன்வந்தது நினைவிற்கு வரவே, திருச்சி நோக்கிப் பயணமானார்.

டி.எஸ். பழனிசாமி பிள்ளை அறக்கட்டளை

திருச்சி தென்னூரில் வசித்து வந்த செல்வந்தர் திருவாளர் **சண்முகம் பிள்ளை** அவர்களுக்கு திருமக்களாய் உதித்தோர் மூவர். மூத்தவர் **ச.முத்துசாமி பிள்ளை**, இரண்டாமவர் **ச. பொன்னுசாமி பிள்ளை**, மூன்றாமவர் **டி.எஸ்.பழனிசாமி பிள்ளை** ஆவர்.



வள்ளல் தி.ச.பழனிசாமி பிள்ளை

திரு டி.எஸ்.பழனிசாமி பிள்ளை அவர்கள் வழக்கறிஞராய் பணியாற்றி பெரும் செல்வம் சேர்த்தவர். இவர் 1928 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் நாள் காலமானார். இவருக்கு மனைவி மற்றும் குழந்தைகள் இல்லாததாலும், மேலும் இவர் தனது இறுதிக் காலத்தில் உயில் எதனையும் எழுதி வைக்காததாலும், இவரது சகோதரர்களே இவரின் சொத்துக்களுக்கு வாரிசுதாரர்கள் ஆனார்கள். அவர்கள் விரும்பியிருந்தால் சொத்துக்களை இருவரும் பங்கிட்டுக் கொண்டிருக்கலாம். ஆனால் அவ்வாறு செய்தார்களில்லை. உண்மையின் உறைவிடமாகவும், பெருந்தன்மையின் இலக்கணமாகவும் விளங்கிய இவரது

சகோதரர்கள் ச.முத்துசாமி பிள்ளை மற்றும் ச.பொன்னுசாமி பிள்ளை ஆகிய இருவரும் இணைந்து, 1930 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஒன்றாம் நாள், தங்களது தமையனாரின் சொத்துக்களை மூலதனமாக வைத்து, அவர் பெயரிலேயே, **டி.எஸ்.பழனிசசாமி பிள்ளை அறக்கட்டளை** என்னும் பெயரில் அறக்கட்டளை ஒன்றினை நிறுவினார்கள்.

ஈஸ்வரன் கிருபையால் எங்களுக்கு வேண்டிய சொத்துக்கள் இருப்பதாலும், **எங்களுடைய பிள்ளைகளும் சம்பாதிக்கத் தக்கவர்களாயிருப்பதாலும் காலஞ்சென்ற எங்கள் சகோதரர் பழனிசாமி பிள்ளை**, **தனக்குப் பின் தன் சொத்துக்களை தரும வாசக சாலையும்**, **தரும பள்ளிக்கூடமும்** Elementary Education and Industrial School , **அதாவது தன்னுடைய பள்ளிக் கூடம் விட்டுப் போகும் பொழுதே பையன்கள் 4 அணாவாவது சம்பாதிக்கும்படியான கைத் தொழில் எதாவதொன்று கற்றுக் கொண்டு போக வேண்டுமென்றும்**, Non Brahmin Hostel and Scholarship **நம்முடைய வகுப்பினர்களுக்கு கொடுக்க வேண்டும் என்றும் யோசித்தார்** என்பதனைப் பதிவு செய்து இவ்வறக்கட்டளையினை நிறுவினார்கள்.

இதுமட்டுமா? தங்களுக்குப் பின் இவ்வறக்கட்டளையைப் பராமரிக்க தக்கவர் யார் என்பதைக் குறிப்பிடும் போது, ச.முத்தசாமி பிள்ளை மற்றும் ச.பொன்னுசாமி பிள்ளை ஆகியோரின், கறை படியாத, நேர்மையான பெருந்தன்மையான உள்ளத்தினையும், அவர்கள் தங்கள் தமையனாரிடத்தும், அறக்கட்டளையின் பேரிலும் வைத்திருந்த பற்றும் பாசமும் வெளிப்படுவதைக் காணலாம்.

எங்கள் ஆயுசுக்குப் பிறகு, **எங்களில் ச.முத்துசாமி பிள்ளையின் குமாரர்களாகிய பாலசுப்பிரமணிய பிள்ளை**, **அருணாசலம் பிள்ளை மற்றும் எங்களில் ச.பொன்னுசாமி பிள்ளையின் குமாரர்களாகிய ரெத்தின சபாபதி பிள்ளை**, **டி.இராமலிங்கம் பிள்ளை ஆகியோரை எங்களுக்குப் பிறகு தருமங்கள் நடத்திவர நியமிக்கிறோம். இந்த வாரிசுகளுக்குப் பின்னால் யாருடைய ஸ்தானமாவது காலியானால்**, **அந்த ஸ்தானத்தை மற்றவர்கள் ஒருமித்து**, **நம்மடைய குடும்பத்தில் தரும சிந்தனையும் யோக்கியதையும் உள்ளவருமான ஒருவரை நியமிக்க வேண்டும்** என்று பதிவு செய்தனர்.

அறக்கட்டளையினை நிறுவியவுடன், பொன்னுசாமி , முத்துசாமி இருவரும் தரும வாசக சாலையைத் தொடங்கினர். பள்ளிக் கூடம், தொழிற் பயிற்சிப் பள்ளியும் நிறுவிட கட்டிடம் கட்ட அஸ்திவாரம் போட்டார்களே தவிர, போதிய வருமானம் இல்லாமையால், அக் கல்வி நிறுவனங்களைத் தொடங்க அவர்களால் இயலவில்லை. இவ்வறக்கட்டளையில் சொத்துக்கள் இருந்தனவே தவிர, அச்சொத்துக்கள் மூலம் கிடைக்கும் வருவாய் மிகவும் குறைந்த அளவாகவே இருந்தது.

மேலும் இவ்வறக்கட்டளையினை நிறுவியவர்களில் ஒருவரான எஸ்.முத்துசாமி பிள்ளை அவர்கள் 23.11.1934 இல் காலமானார். இதனால் அறக்கட்டளைப் பணிகளில் பெரிதும் தொய்வு ஏற்பட்டது.

இந்நிலையில்தான் 1938 இல் நடைபெற்ற கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் வெள்ளி விழாவில் கலந்து கொண்ட டி.எஸ்.பொன்னுசாமி பிள்ளை அவர்கள்

அறக்கட்டளையின் வருவாயினைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கு வழங்குவதாக அறிவித்தார்.

அறக்கட்டளையில் மாற்றம்

போதிய முதற்பொருள் இன்மையால் சென்னைப் பல்கலைக் கழகத்தார், கரந்தைப் புலவர் கல்லூரியை அங்கீகரிக்க மறுத்ததும், கல்லூரிக்கு அங்கீகாரம் பெறுவதற்கு பல்லாற்றானும் முயன்ற தமிழவேள், இறுதியாக திருச்சிக்குப் பயணம் செய்து டி.எஸ. பொன்னுசாமி பிள்ளை அவர்களைச் சந்தித்தார்.

இச்சந்திப்பின் பயனாக தி.ச.பழனிச்சாமி பிள்ளை அறக்கட்டளையின் குறிக்கோளில் சில மாற்றங்களைச் செய்து, அம்மாற்றங்களை அதிகாரப் பூர்வமாக பத்திரப் பதிவு செய்யவும் பொன்னுசாமி பிள்ளை அவர்கள் முன்வந்தார்.

இதன்படி, **ஏழை மாணவர்கட்குத் தொழிலும் கல்வியும் அளித்து அவர்களை முன்னுக்குக் கொண்டுவர வேண்டும் என்பதே என் தம்பி டி.எஸ்.பழனிச்சாமி பிள்ளை அவர்களும், எனது அண்ணன் டி.எஸ்.முத்துசாமி பிள்ளை அவர்களும், நானும் ஆகிய மூவர்களும் கொண்டிருந்த எண்ணமாயிருந்தும், இதில் கண்டிருக்கும் சொத்துக்களை கொண்டே, அதை முடிப்பது முடியாத கருமமாயிருப்பதாலும், இதே கருத்துக்களை நிறைவேற்றும் எண்ணத்துடன் தஞ்சாவூரிலுள்ள, கருந்தட்டாங்குடி, தமிழ்ச் சங்கமானது மாணவர்களுக்கு இல்லங்கள் அமைத்து உண்டி, உறையுள் முதலியன கொடுத்து, தொடக்கக் கல்வியும் தமிழ்ப் புலவர் கல்லூரியும் ஏற்படுத்தி, மாணவர்கட்கு தொழிற் கல்வியும் பெற வசதிகள் செய்தது நடத்தி வருகின்றமையால், அதன் வாயிலாகவே, எமது எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ளுதல் சாலச் சிறந்தது எனக் கருதி,** 1.11.1930 **இல் நானும், டி.எஸ்.முத்துசாமி பிள்ளையும் எழுதி வைத்த டிரஸ்ட் பத்திரத்தை, இப்போதைய தேவைக்குத் தக்கவாறு மாறுதல் செய்து, இதுமுதல் நடந்து வர வேண்டிய தரும பரிபாலன ஏற்பாடுகளை இதன் மூலமாக எழுதி வைக்கின்றேன்** என 1940 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 14 ஆம் நாள் திருச்சி பத்திரப் பதிவு அலுவலகத்தில், மாற்றியமைக்கப் பட்ட அறக்கட்டளையானது பதிவு செய்யப்பட்டது.

உயிர் பெற்ற கல்லூரி

தி.ச.பழனிசாமி பிள்ளை அறக்கட்டளையில் மாற்றங்கள் செய்து, பதிவு செய்யப்பெற்ற பத்திரத்தின் நகலினை, சென்னைப் பல்கலைக் கழகத்தாருக்கு அனுப்பி, அறக்கட்டளையின் சொத்துக்களையே, ஐம்பதாயிரம் ரூபாய் பொறுமானமுள்ள முதற்பொருளாக ஏற்றுக் கொண்டு, கரந்தைப் புலவர் கல்லூரிக்கு அங்கீகாரம் வழங்கிட வேண்டும் என்று உமாமகேசுவரனார் கடிதம் எழுதி வேண்டினார். மேலும் இரண்டாண்டுகளாக முதல்வர் என்று ஒருவர் இல்லாமலேயே செயல்பட்ட, கரந்தைப் புலவர் கல்லூரிக்கு, **நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார்** அவர்களை முதல்வராகவும் அறிவித்தார்.

நாவலர் அவர்களைக் கல்லூரி முதல்வராகவும், அறக்கட்டளைச் சொத்துக்களை முதற்பொருளாகவும், ஏற்றுக் கொண்ட, சென்னைப் பல்கலைக்

கழகம், 1941 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இக்கல்லூரிக்கு அங்கீகாரம் அளித்தது. கல்லூரிக்குப் புத்துயிர் வந்தது.

நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் அவர்கள் கரந்தைப் புலவர் கல்லூரியின் முதல் முதல்வராக, உமாமகேசுவரனார் மேல் கொண்டிருந்த அன்பால், பாசத்தால், ஊதியம் எதுவுமே பெறாத மதிப்பியல் முதல்வராக 1941 முதல் நான்காண்டுகள் தொண்டாற்றினார்.

ஆனால், இப்புலவர் கல்லூரியில் பயின்று வெளிவரும் முதல் மாணவனைக் கண்ணாரக் காணும் நாளே என் வாழ்வில் பொன்னாள், அதுவே கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்குத் திருநாள். புலவர் பட்டத்துடன் வெளிவரும் முதல் மாணவனைக் கண்ட அடுத்த நொடியே என் உயிர் பிரியுமானால், அதை விட பேரானந்தம் வேறொன்றுமில்லை என்று பலவாறு கனவு கண்டிருந்த உமாமகேசுவரனாரின் வாழ்க்கையில் விதி விளையாடியது.

ஆம். வடபுலப் பயணம் மேற்கொண்டிருந்த உமாமகேசுவரனார், தமிழகம் திரும்பாமலேயே, கரந்தைப் புலவர் கல்லூரிக்கு அங்கீகாரம் கிடைத்த அடுத்த மாதமே, **அயோத்திக்கு** அருகில் உள்ள **பைசாபாத்** என்னும் சிற்றூரில் 9.5.1941 இல் இவ்வுலக வாழ்வைத் துறந்தார். என்னே விதியின் விளையாட்டு.

பல்கலைக் கழகத்தோடு இப்புலவர் கல்லூரி இணைந்த பிறகு 1942இல் முதல் வித்துவான் புகு முக தேர்விலும், 1943 இல் முதல் முதனிலைத் தேர்விலும், 1945 முதல் இறுதி நிலைத் தேர்விலும் மாணவர்கள் கலந்து கொள்ளலாயினர். இறுதி நிலைத் தேர்வில் முதன்முதலாகக் கலந்து கொண்ட கல்லூரி மாணவர்கள் ஆறு பேரும் வெற்றி பெற்றனர். இவர்களுள் **அ.மா.பரிமணம்** என்பாரும், **இரா.கலியபெருமாள்** என்பாரும், வித்துவான் இறுதி நிலைத் தேர்வில் முதல் வகுப்பில் முதல் தரத்தில் வெற்றி பெற்று, சென்னைப் பல்கலைக் கழகத்தின் தங்கப் பதக்கப் பரிசினை வென்றார்கள்.

தமிழர் கடமை

கல்லூரித் தொடங்கப் பெற்றாலும் தனியொரு கட்டிடம் இன்றியே, இக் கல்லூரிச் செயலாற்றி வந்தது. பதினைந்து ஆண்டுகள் கடந்த பின்னரே, தஞ்சை நகரப் பெரு வணிகர்களின் முயற்சியால், கல்லூரிக்கெனத் தனியொரு கட்டிடம் கட்டப்பெற்றது.

கரந்தைப் புலவர் கல்லூரி என்பது வெறும் செங்கற்களாலும், மணலாலும் கட்டப்பெற்றக் கல்லூரியன்று. தமிழவேள் உமாமகேசுவரனாரின் அயரா உழைப்பாலும், உதிரத்தாலும், உருப் பெற்றக் கல்லூரியாகும்.

தி.ச.பழனிசாமி பிள்ளை, தி.ச.முத்துசாமி பிள்ளை, தி.ச.பொன்னுசாமி பிள்ளை என்னும் வள்ளல்களின், வள்ளல் தன்மையால் உயிர் பெற்ற கல்லூரியாகும்.

நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார், சிவ.குப்புசாமி பிள்ளை, வெள்ளைவாரணனார், பெரியசாமி புலவர் மற்றும் எண்ணற்ற பெயர் தெரியாத தமிழன்பர்களின் உழைப்பால், நன்முயற்சியால் உயர்ந்த கல்லூரியாகும்.

கரந்தைப் புலவர் கல்லூரியும், மாணவர் இல்லங்களும் வளர, செழிக்க, தஞ்சை நகர வணிகர்கள் ஆற்றியுள்ள சேவை அளவிடக்கரியதாகும். நாள்தோறும் சங்க அலுவலர்கள், கடைவீதிக்கு ஒரு சாக்குப் பையுடன் செல்வார்கள். தஞ்சை நகர வணிகர்கள் அனைவரும் தங்களின் ஒரு நாள் வருவாயின் சிறு பகுதியை சங்கத்திற்கு அன்பளிப்பாய் வழங்குவார்கள். பணமாக மட்டுமல்ல, அரிசியாக, காய் கனிகளாக, மளிகைப் பொருட்களாக, தங்களால் இயன்றதை, ஒரு நாள், இரு நாள் அல்ல தினமும் வழங்கி, வளர்த்த கல்லூரி இப் புலவர் கல்லூரியாகும்.

கரந்தை, கூடலூர், குளமங்கலம், அரசூர், அம்மன்பேட்டை, பள்ளியக்கிரகாரம், சுங்கான்திடல், ஆலங்குடி, ஆத்தூர் போன்ற ஊர்களில் சிறு,சிறு அரிசி அரவை ஆலைகள் அதிகமாய் இருந்த காலகட்டம் அது. அன்றைய நாளில் அறுவடை மூலம் கிடைக்கும் நெல்மணிகளை, பத்தாயம் என்றழைக்கப்படும் சேமிப்பு கலன்களில் சேமித்து வைத்து, அவ்வப்போது உணவிற்குத் தேவைப்படும் அளவிற்கு, நெல்மணிகளை அரைத்து அரிசியாக்கிக் கொள்வார்கள். தஞ்சைப் பகுதியை சுற்றியுள்ள அனைத்து அரிசி அரவை ஆலைகளிலும், கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் ஒரு சாக்குப் பை வைக்கப் பெற்றிருக்கும். தங்களின் இல்லங்களுக்குத் தேவையான அரிசியை அரைத்துச் செல்லும் அன்பர்கள், அந்த அரிசியிலிருந்து, ஒரு கைப் பிடியோ அல்லது ஒரு படி அரிசியையோ, தங்களின் வசதிக்கு ஏற்றவாறு, சங்கத்தின் சார்பில் வைக்கப்பெற்றிருக்கும் சாக்குகளில் அன்பளிப்பாய் அளித்துச் செல்வார்கள். சங்க அலுவலர்கள் வாரந்தோறும் அரிசி அரவை ஆலைகளுக்குச் சென்று, சங்கத்தின் சாக்குப் பையில் சேர்ந்திருக்கும் அரிசியை, மாணவர் இல்லதில் கொண்டு சேர்ப்பார்கள். இவ்வாறாக தஞ்சையினைப் சுற்றியுள்ள மக்கள் அனைவரும், இது நமது சங்கம், இது நமது மாணவர்களுக்கான இல்லம், இது நமது மக்களுக்கானக் கல்லூரி, இச் சங்கம் பாடுபடுவது நமது மக்களுக்காக என்றுணர்ந்து, தங்களது குடும்ப வளர்ச்சியும் சங்க வளர்ச்சியும் வேறுவேறல்ல, ஒன்றே எனக் கருதி உணவிட்டு வளர்த்த கல்லூரி இப்புலவர் கல்லூரியாகும்.

தமிழ்ப் பெரியோர்கள், தமிழன்பர்கள், செல்வந்தர்கள், பெரு, சிறு வணிகர்கள் என அனைவரின் தன்னலமற்ற தியாகத்தாலும், உழைப்பாலும், உதிரத்தாலும் வளர்ந்த கல்லூரி, கரந்தைப் புலவர் கல்லூரியாகும்.

இன்று தமிழவேள் **உமாமகேசுவரனார் கரந்தைக் கலைக் கல்லூரி** என உமாமகேசுவரனாரின் பெயரினையும், உயிரினையும் பெற்று வளர்ந்து நிற்கும் இக்கல்லூரியினைப் பேணிப் பாதுகாப்பதும், வளர்ப்பதும், தமிழராய் பிறந்த ஒவ்வொருவரின் கடமையாகும்.

சைவ சித்தாந்த சாத்திர வரலாறு

https://archive.org/details/saivasiddhantasathiravaralaru_201910

சைவ சித்தாந்த சாத்திர வரலாறு

நூலாசிரியர்: பேரா. க. வெள்ளைவாரனனார்
வெளியீட்டு எண்: 250, 2002, ISBN:81-7090-310-6
டெம்மி1/8, பக்கம் 840, உரு. 200.00, முதற்பதிப்பு

சைவ சமய மெய்நூல்களாம் சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கின் பொருளமைப்பினை வரலாற்று நோக்கில் ஆராய்ந்து இந்நூலைப் படைத்துள்ளார் ஆசிரியர். தொல்காப்பியம், சங்க இலக்கியம், திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை, திருமந்திரம், திருமுறைகள் ஆகிய பண்டைத் தமிழ் நூல்களில் பொதிந்துள்ள நுண்பொருள்களையெல்லாம் ஒப்பு நோக்கி ஆராய்ந்து இந்நூலில் வெளிக்கொணர்ந்துள்ளார் ஆசிரியர். சமயம் மற்றும் மெய்ப்பொருளியல் துறைக்குப் பெருமை நல்கும் அரிய படைப்பு.

தமிழ்ப்பணி மன்றம்

https://thamizhppanimanram.blogspot.com/2020/02/26.html

வெள்ளைவாரணனார்





பேராசிரியர் க. வெள்ளைவாரணனார் (1917–1988) எழுதிய **'பன்னிரு திருமுறை வரலாறு'** சைவ சமய இலக்கியத்தில் மிகச்சிறந்த ஆய்வு நூலாகும். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றிய இவர், பன்னிரு திருமுறைகளின் தோற்றம், காலமுறை, பண்கள் மற்றும் திருமுறை ஆசிரியர்களின் வரலாற்றை இரண்டு பாகங்களாக விரிவாக இந்நூலில் தொகுத்துள்ளார்.

பன்னிரு திருமுறை வரலாறு - முக்கிய சிறப்பம்சங்கள்:

- **ஆசிரியர்:** வித்துவான் க. வெள்ளைவாரணன்.
- **பதிப்பகம்:** அண்ணாமலைப் பல்கலைக்கழகம், பின்னர் சாரதா பதிப்பகம்.
- **பாகங்கள்:** இரண்டு பாகங்களாக வெளிவந்தது (பாகம் 1: 1-7 திருமுறைகள், பாகம் 2: 8-12 திருமுறைகள்).
- **பொருள்:** பன்னிரு திருமுறைகளை எழுதிய நாயன்மார்களின் காலம், பாடல்களின் பின்னணி, தேவாரப் பண்கள் மற்றும் இசையமைதி குறித்து நுணுக்கமாக ஆராயப்பட்டுள்ளது.
- **சிறப்பு:** தேவாரத் திருப்பதிகங்களின் தொகுப்பு முறை மற்றும் பண்ணிசை மரபுகள் குறித்து மிக ஆழமான விளக்கங்களை இந்நூல் தருகிறது.

வெள்ளைவாரணனாரின் பிற முக்கிய பணிகள்: அவர் பன்னிரு திருமுறை வரலாறு மட்டுமின்றி, 'இசைத் தமிழ்', 'திருத்தொண்டர் வரலாறு', 'சைவ சித்தாந்த சாத்திர வரலாறு', மற்றும் பல தொல்காப்பிய உரைவள நூல்களை எழுதியுள்ளார். இவரின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன.

வெள்ளைவாரணனாரின் 'பன்னிரு திருமுறை வரலாறு' இன்றும் திருமுறை ஆராய்ச்சியாளர்களுக்கு ஒரு கலங்கரை விளக்கமாகத் திகழ்கிறது

திருமுறைகள் மற்றும் திருமுறை சார்ந்தவைகள்


https://shaivam.org/scripture/Tamil/thirumurais-and-related-of-thirumurais-shaivite-literature/#gsc.tab=0

செங்குந்தர் வரலாறு மீட்பு குழு
Senguntha Kaikola Mudaliyar History

https://senguntharmudaliarhistory.blogspot.com/2020/10/Ka%20vellaivanavanar%20mudaliar%20kaikolar.html

தமிழறிஞர் க. வெள்ளை வாரணனார் முதலியார்

செங்குந்தர் கைக்கோள முதலியார்
குலத்தோன்றல்
தமிழறிஞர்
க. வெள்ளை வாரணனார் முதலியார்



(14.01.1917 - 13.06.1988)

தமிழறிஞர் க. வெள்ளை வாரணனார்: அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலிருந்து தமிழிசை துறையில் பணி ஆற்றியவர். இயற்றமிழோடு, இசைத்தமிழின் நுணுக்கங்களை அறிந்த நுண்ணறிவாளராகத் திகழ்ந்தவர். யாழ்நூல் விபுலானந்த அடிகளாரால் உருவாக்கப்பட உதவியவருள் இவரும் ஒருவர். இவர் 'இசைத் தமிழ்' என்ற அரிய நூல் ஒன்றைத் தந்துள்ளார். இந்நூல் முத்தமிழ்த் திறன், இசை நூல் வரன்முறை, இசையமைதி, இசைத் தமிழ் இலக்கியம், இசைக் கருவிகள், இசைப்பாட்டின் இலக்கணம், இசைத் தமிழ்ப்

பயன், தமிழிசை இயக்கம், இசைத்தமிழ் வளர்ச்சிக்கு ஆக்கமாகும் பணிகள் என்ற ஒன்பது இயல்களைக் கொண்டுள்ளது.

இளமை

தஞ்சை மாவட்டம் குடந்தைக்கு அருகிலுள்ள திருநாகேசுவரத்தில் ஓர் நவவீரர் வம்சமான செங்குந்தர் கைக்கோள முதலியார் குடும்பத்தில் கந்தசாமி முதலியார் - அமிர்தம் அம்மையார் தம்பதியருக்கு மகவாக 1917ம் ஆண்டு ஜனவரி 14ம் தேதி வெள்ளைவாரணனார் பிறந்தார். தம் இளமைக் கல்வியை திருநாகேசுவரத்தில் கற்ற வெள்ளைவாரணனார், திருப்பெருந்துறை மாணிக்கவாசகர் தேவாரப் பாடசாலையில் மாணாக்கராகச் சேர்ந்து திருமுறைகளை இசையோடு கற்றுத் தேர்ச்சி பெற்றார்.

பின்னர் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் வித்துவான் படிப்பில் சேர்ந்து 1935 இல் வித்துவான் தேர்வில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார். 1935-37 இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ஆய்வு மாணவராகச் சேர்ந்து, 'தொல்காப்பியம் - நன்னூல் எழுத்ததிகாரம் ஒப்பீடு' என்னும் ஆய்வேட்டினை எழுதி முடித்தார்.வெள்ளைவாரணனார் 1938 முதல் 1943 வரை தஞ்சாவூர் கரந்தைத் தமிழ்க் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணிபுரிந்தார். 1939 ஆம் ஆண்டு பொற்றடங்கண்ணி அம்மையாரை வாழ்க்கைத் துணைவியாக ஏற்றார்.

பணி

1943 இல் வெள்ளைவாரணனார் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் விரிவுரையாளராகச் சேர்ந்தார். 1962 இல் இவரின் புலமை நலனைக் கருத்தில் கொண்டு விதிகளைத் தளர்த்தி பல்கலைக்கழகம் இவருக்கு இணைப்பேராசிரியர் பதவி வழங்கியது.
1977 ஆம் ஆண்டு துறைத்தலைவர் பொறுப்பை ஏற்றார். பல்கலைக்கழக ஆளவை மன்றம், ஆட்சிக்குழு ஆகியவற்றில் உறுப்பினராகவும் பணிபுரிந்தார். தம் 62 இம் வயது வரை அங்குப் பணியாற்றி 1979 இல் ஓய்வு பெற்றார்.

1979 முதல் 1982 ஆம் ஆண்டு வரை மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் சிறப்புப் பேராசிரியராகவும், துறைத்தலைவராகவும் பணியாற்றினார். பேராசிரியர் க.வெள்ளைவாரணனார் மாணாக்கரின் அன்புக்குரியவராகத் திகழ்ந்தார். இவர் தமிழ் இலக்கியம், இலக்கணம், திருமுறைகள், சைவசித்தாந்தம் ஆகியவற்றைக் கற்றுத் துறைபோய நற்றமிழ் அறிஞரகத் திகழ்ந்தார்.

நூல்கள்

வெள்ளைவாரணனாரின் உரை நூல்கள் அவரின் நுண்மாண் நுழை புலத்தினைக் காட்டுவன. விபுலானந்தரின் யாழ் நூலுக்கு இவர் எழுதியுள்ள முன்னுரை இவரின் இசைப் புலமைக்குச் சான்றாக அமைந்துள்ளது. வெள்ளைவாரணனார் எழுதிய நூல்கள் சில.

இலக்கண நூல்கள்

தமிழ் இலக்கிய வரலாறு - தொல்காப்பியம்
தொல்காப்பியம் - நன்னூல் எழுத்ததிகாரம்
தொல்காப்பியம் - நன்னூல் சொல்லதிகாரம்
தொல் - பொருள் உரைவளம் (ஏழு தொகுதிகள்)
சங்க இலக்கியம் சார்ந்த நூல்கள்
குறிஞ்சிப்பாட்டாராய்ச்சி
சங்ககால தமிழ் மக்கள்
சைவ சமயம் சார்ந்த நூல்கள்
திருவுந்தியார்
திருக்களிற்றுப்படியார்
சேக்கிழார் நூல்நயம்
பன்னிரு திருமுறை வரலாறு
தில்லைப் பெருங்கோயில் வரலாறு
திருவருட்பாச் சிந்தனை

உரை நூல்கள்

தேவார அருள்முறைத் திரட்டுரை
திருமந்திர அருள்முறைத் திரட்டுரை
திருவருட்பயன் விளக்கவுரை

பிற

காக்கை விடு தூது என்னும் படைப்பிலக்கியத்தையும்,இசைத்தமிழ், நாடகத்தமிழ் சார்ந்த நூல்களையும் எழுதியுள்ளார். இவரது நூல்களுள் சில நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன.

நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்கள்

அற்புதத் திருவந்தாதி
இசைத்தமிழ்
காக்கை விடு தூது
பன்னிரு திருமுறை வரலாறு
பன்னிரு திருமுறை வரலாறு - இரண்டாம் பகுதி
சைவ சித்தாந்த சாத்திர வரலாறு
சங்ககாலத் தமிழ் மக்கள்
தில்லைப் பெருங்கோயில் வரலாறு
திருமந்திர அருள்முறைத் திரட்டு
திருத்தொண்டர் வரலாறு
திருவருட்பாச் சிந்தனை
திருவுந்தியார் திருக்களிற்றுப்படியார்
தொல்காப்பியப் பொருளதிகார ஆய்வு
தொல்காப்பியம் களவியல் உரைவளம்
தொல்காப்பியம் கற்பியல் உரைவளம்
தொல்காப்பியம் மெய்ப்பாட்டியல் உரைவளம்
தொல்காப்பியம் நன்னூல் - எழுத்ததிகாரம்
தொல்காப்பியம் நன்னூல் - சொல்லதிகாரம்
தொல்காப்பியம் பொருளியல் உரைவளம்
தொல்காப்பியம் புறத்திணையியல் உரைவளம்
தொல்காப்பியம் உவமையியல் உரைவளம்
தொல்காப்பியம் வரலாறு
திருவருட் பயன்
தொல்காப்பியம்-செய்யுளியல் உரைவளம்
தொல்காப்பியம்-மரபியல்-உரைவளம்
கவிதை நூல்கள்.

சிறப்புகள்

தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் இவருக்கு 1985 இல் கலைமாமணி விருதை வழங்கியது. தமிழ் நாட்டிலுள்ள பல்வேறு இலக்கியம் மற்றும் சமய அமைப்புகளும், பல்கலைக்கழகங்களும் வெள்ளைவாரணனாருக்குப் பல்வேறு விருதுகளை வழங்கி பெருமை சேர்த்துள்ளன.

சித்தாந்தச் செம்மல்
தமிழ்ப் பெரும்புலமைச் சான்றோர்


திருமுறை உரைமணி
செந்தமிழ்ச் சான்றோர்
தமிழ்மாமணி
சிவகவிமணி
திருமுறைத் தெய்வமணி
தமிழ்ப் பேரவைச் செம்மல்
ஆகிய விருதுகள் பல்வேறு ஆண்டுகளில் இவருக்கு வழங்கப்பட்டன.


மறைவு


தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும்போது வெள்ளைவாரணனாருக்கு உடல் நலம் குன்றியது.எனவே தில்லை சென்று தங்கி வாழ்ந்திருந்த வெள்ளைவாரணனார் 1988 ஆம் ஆண்டு ஜூன் 13 ஆம் நாள் இவ்வுலகை விட்டு மறைந்தார்.























உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

International Institute of Tamil Studies

https://ulakaththamizh.in/book_all/54

அரிய நூல்கள்

21 நூல்கள் >>> வாசிக்கவும்

காக்கை விடு தூது

https://ta.wikisource.org/wiki/%E0%AE%95%E0%AE%BE%E0%AE%95%E0%AF%8D%E0%AE%95%E0%AF%88_%E0%AE%B5%E0%AE%BF%E0%AE%9F%E0%AF%81_%E0%AE%A4%E0%AF%82%E0%AE%A4%E0%AF%81

காக்கை விடு தூது என்று பொதுவாக அறியப்படும் நூல் தூது சிற்றிலக்கிய வடிவில் அமைந்த ஒருநூல். க. வெள்ளைவாரணனார் எழுதிய இந்நூல் 1939-ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. இந்நூலின் 1987-ஆம் ஆண்டுப் பதிப்பில் இந்நூலுக்குச் "சென்னை மாநில முதலமைச்சர் ச. இராசகோபாலாச்சாரியாரிடத்து வெண்கோழியுய்த்த காக்கை விடு தூது" என்னும் நீண்ட பெயர் காணப்படுகிறது. ஆசிரியர் இந்நூலைப் பாந்தளூர் வெண்கோழியார் என்னும் பெயரில் வெளியிட்டுள்ளார்.

பதிப்புரை

பாரதநாடு வெள்ளையர் ஆட்சியிலிருந்து விடுதலை பெறாத நிலையில் அளிக்கப்பெற்ற தேர்தல் உரிமையினையேற்றுத் தேர்தலில் வெற்றிபெற்ற காங்கிரசு கட்சி, சென்னை மாநில ஆட்சியுரிமையைக்

கைப்பற்றியது. மூதறிஞர் இராசகோபாலாச்சாரியார் முதலமைச்சராயினார். அக்காலத்தில் உயர்நிலைப் பள்ளிகளில் தாய்மொழி கட்டாயமாக்கப் பெறவில்லை; ஆங்கிலமே பயிற்று மொழியாக இருந்தது. அந்நிலையில் முதலமைச்சர் இராசகோபாலாச்சாரியார் இந்தி மொழியினைக் கட்டாயப்பாடமாக்கினார். அப்பொழுது தமிழ் விருப்பப் பாடமாகவே இருந்தது. தமிழைக் கட்டாய பாடமாக ஆக்காமல் அயன்மொழியாகிய இந்தியைக் கட்டாயப் பாடமாக்குதல் கூடாது என மறைமலையடிகளார் பேராசிரியர் ச. சோமசுந்தரபாரதியார், தமிழவேள் உமாமகேசுவரம் பிள்ளை முதலிய தமிழறிஞர்களும், சர். ஏ. டி. பன்னீர்ச்செல்வம், தந்தை பெரியார், இராவ் சாகிபு ஐ. குமாரசாமி பிள்ளை, கி.ஆ.பெ. விசுவநாதம், அறிஞர் அண்ணா முதலிய தமிழன்பர்களும் எதிர்த்தார்கள். மூதறிஞர் இராசாசி அவர்கள் தமது கட்சிப் பெரும்பான்மையைக் கொண்டு தமது திட்டத்தைக் கைவிடவில்லை. இந்நிலையில் இத்திட்டத்தை எதிர்த்த தந்தை பெரியார் முதலியவர்களும் துறவிகளும் புலவர்களும் பெண்களும் சிறையிலடைக்கப் பெற்றனர். அந்நிலையில் 1939-ஆம் ஆண்டிற் பாடப்பெற்றதே 'காக்கை விடுதூது' என்னும் பனுவலாகும். இது தமிழ்ப்பொழில், விடுதலை, திராவிடநாடு ஆகிய இதழ்களில் வெளிவந்தது. இப்பொழுது இந்நூலின்படி கிடைக்காமையால் இரண்டாம் பதிப்பாக வெளியிடப்பெறுகிறது. இதனை வனப்புற அச்சிட்டுதவிய அண்ணாமலை நகர் சிவகாமி அச்சகத்தார்க்கு என் நன்றியும் பாராட்டும் என்றும் உரியவாகும். இந்நூலை என் ஆசிரியப் பெருந்தகை டாக்டர், நாவலர் ச. சோமசுந்தர பாரதியார் அவர்கட்கு உரிமையாக்குகின்றேன்.

செந்தமிழைக் காக்கும் திறலார் புகழ்சோம
சுந்தர பாரதியாம் தோன்றலார் - இந்திமொழி
மீதூரா வண்ணந் தடுத்தார்வெண் கோழிவிடு
தூதுரிமை யாமவர்க்குச் சொல்.

14-1-87
142, கனகசபை நகர்
சிதம்பரம் } **ச. வெள்ளைவாரணன்**

@@@@@@@@@@@

அண்ணாமலைப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் நாவலர் டாக்டர் ச.சோமசுந்தர பாரதியார் எம்.ஏ., பி.எல், அவர்கள்

உளமுவந்து வாழ்த்திய
பாட்டியற்றமிழுரை வாழ்த்து

காக்கைக்குத் தூது சொல வாக்குதவும் வெண்கோழி
நீர்க்குட் சிறுமீனை நினைந்துணவின் நிலவிகிதம்
பார்க்குஞ் செங்கட்கள்ளப் பருந்தைத் திருந்துமென
நம்பும் வெளிறன்று, நன்னார் நமைகலிய
வெம்பும் கொடுவிரகே. வேட்பார் பகைசொலினும்
எள்ளற் கருமறப்போர் இசைந்து தொடங்குமுனே
உள்ளங் கரவா துரனோ டறிவுறுத்தி
விள்ளவொரு வாயில் விடுக்குஞ் செந்தமிழ்மரபு
உள்ளி உரை உதவும் வெள்ளை மனப் பண்பால்
துதிக்கைக் கருமாத் தொடராவாண நீயென்-றுணர்ந்தெவரும்
துதிக்க வெண்மையடை துலங்கப்பெயர் வாய்ந்ததுகொல்
இருபாற்கேட் டொருநோக்க மிறவாக் கரவற்ற
காரண்டக் காக்கைப்புள் கண்ணற்ற கருவுளத்தம்
மாரண்டு பகையஞ்சா வாயிலெனவிடுக்கச்
சூழ்ந்து துணிந்ததிறம் சொல்லுந் தரத்ததிலை
வாழ்ந்ததமிழ்த் தாய்தளரா வாறுரிய வாய்மொழிநின்
வெண்பா நமர்படையின் வேசறவைத் தீர்த்து
வண்புகழ் மூவாத் தண்தமிழ் தழையப்
பகைமற மழியப் பலநலம் பொலிய
விரைந்து வீறொடும் வெற்றிவிளைத்திடுக.

அன்பனே, தூதுரை படித்து மீதூரி மகிழ்ந்தேன். காக்கைபாற் பல பழியொழித்து வாழ்த்திய பகுதிகளும், தமிழர் வீறு கூறுங் கூற்றுக்களும் பெண்டிரும், தருக்கிய சிறைபுகுஞ் சிறப்புரையும் உளமினிக்கும் வளமுடையவாம். வனசகரந்துவருமங்கத நகைச்சுவை வாய்மைகுன்றா வனப்புடைத்து.

தமிழறமோம்ப ‘வண்போர்க்குக் கைவழங்க'த் தூது விட்டு வெட்சி சூடிய நின்செய்யுள், முறையே வஞ்சியுந் தும்பையும் மிலைந்து

வாகையும் பெறுக: பாடாண் எம்மனோர் பகர்வோமாக.நாடொறும் நலனும் புகழும் பீடுடன் பெருகப் பல்லாண்டு கூறுகின்றேன்.

14-3-39
பசுமலை

https://keetru.com/index.php/2018-01-12-05-57-50/2014-03-08-04-39-26/2014-03-14-11-17-85/37099-2019-04-25-10-34-36

‘சித்தாந்தச் செம்மல்’

க.வெள்ளைவாரணனார்!

பி.தயாளன்

பயனில சொல்லாப் பண்பும், நகைச்சுவை இழையோட இன்சொல் பேசும் இயல்பும் கொண்டு விளங்கிய இப்புலவர் பெருந்தகை, மாணவர்களின் அன்புக்குறியராகத் திகழ்ந்தவர். இவர் தமிழ் இலக்கியம், இலக்கணம், திருமுறைகள் ஆகியவற்றைக் கற்றுத் தேர்ந்த தமிழறிஞர் ஆவார். இலக்கியச் செல்வராகவும், இலக்கியக் கடலாகவும், கன்னித் தமிழ்க் காவலராகவும் விளங்கிய அருந்தமிழ்ச் சான்றோர் என போற்றப்பட்டவர். இயற்றமிழோடு இசைத் தமிழின் நுணுக்கங்களை ஆராய்ந்து அறிந்த நுண்ணறிவாளராகவும் விளங்கியவர்.

தஞ்சை மாவட்டம் குடந்தைக்கு அருகில் உள்ள திருநாகேசுவரத்தில் கந்தசாமி – அமிர்தம் அம்மையார் தம்பதியினருக்கு மகனாக 14.01.1917 ஆம் நாள் வெள்ளைவாரணனார் பிறந்தார். தம் தொடக்கக் கல்வியை திருநாகேசுவரத்தில் கற்றார். பின்னர் திருப்பெருந்துறை மாணிக்கவாசகர் தேவாரப் பாடசாலையில் சேர்ந்து திருமுறைகளை இசையோடு பாடக் கற்றுத் தேர்ச்சிப் பெற்றார். சிதம்பரம்

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ஆய்வு மாணவராகச் சேர்ந்து, 'தொல்காப்பியம் - நன்னூல் எழுத்ததிகாரம் ஒப்பீடு' என்னும் ஆய்வேட்டினை அளித்தார்.

தஞ்சை கரந்தைத் தமிழ்க் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராக அய்ந்து ஆண்டுகள் பணிபுரிந்தார். பின்னர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் 1943 ஆம் ஆண்டு தமிழ் விரிவுரையாளராகச் சேர்ந்தார். இவரது புலமை நலனைக் கருத்தில் கொண்டு விதிகளைத் தளர்த்தி பல்கலைக் கழகம் இவருக்கு இணைப் பேராசிரியர் பதவி வழங்கியது. தமிழ்த்துறைத் தலைவராக 1977 ஆம் ஆண்டு பொறுப்பேற்று சிறப்பாகப் பணியாற்றினார். அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆளவை மன்றம், ஆட்சிக்குழு ஆகியவற்றில் உறுப்பினராகவும் பணியாற்றினார். மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தில் 1979 முதல் 1982 ஆம் ஆண்டுவரை சிறப்புப் பேராசிரியராகவும், துறைத் தலைவராகவும் பணி புரிந்தார்.

வெள்ளைவாரணனார், 'தமிழ் இலக்கிய வரலாறு தொல்காப்பியம்', 'தொல்காப்பியம் - நன்னூல் எழுத்ததிகாரம்', 'தொல்காப்பியம் - நன்னூல் சொல்லதிகாரம்', 'தொல்பொருள் உரைவளம்' (ஏழு தொகுதிகள்) முதலிய இலக்கண நூல்களையும், 'குறிஞ்சிப் பாட்டாராய்ச்சி', 'சங்க கால தமிழ் மக்கள்' ஆகிய இலக்கிய நூல்களையும், 'திருவுந்தியார்' , 'திருக்களிற்றுப்படியார்', 'சேக்கிழார் நூல்நயம்' ,'பன்னிரு திருமுறை வரலாறு' ,'தில்லைப் பெருங்கோயில் வரலாறு', 'திருவருட்பாச் சிந்தனை' ஆகிய சைவ சமயம் சார்ந்த நூல்களையும், 'தேவார அருள்முறைத் திரட்டுரை', 'திருமந்திர அருள்முறைத் திரட்டுரை', 'திருவருட்பயன் விளக்கவுரை' முதலிய உரை நூல்களையும், 'காக்கைவிடு தூது' என்னும் படைப்பிலக்கியத்தையும், இசைத் தமிழ், நாடகத் தமிழ் குறித்த நூல்களையும் எழுதி தமிழுலகுக்கு அளித்துள்ளார்.

விபுலானந்த அடிகளின் 'யாழ்நூலு'க்கு இவர் எழுதியுள்ள முன்னுரை, இவரின் இசைப் புலமைக்குச் சான்றாக அமைந்துள்ளது.

ராஜாஜி சென்னை மாகாண முதலமைச்சராக இருந்தபோது, 1937ஆம் ஆண்டு இந்தியாவிலேயே முதன் முதலாக, உயர்நிலைப் பள்ளிகளில் இந்திமொழியைக் கட்டாய பாடமாக்கினார். தாய் மொழியாம் தமிழைக் கட்டாயப் பாடமாக்காமல் இந்தியைக் கட்டாயப் பாடமாக்கியதை நாடே எதிர்த்தது! ‘தனித் தமிழ் இயக்கத்தின் தந்தை’ மறைமலையடிகள், நாவலர் சோமசுந்தர பாரதியார், தமிழர் தலைவர் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா முதலானோர் இந்தித் திணிப்பைக் கண்டித்துப் போராடினார்கள். பலர் சிறையிலடைக்கப்பட்டனர்.

தமிழ்ப் புலவர் பெருமக்கள் கிளர்ந்தெழுந்தனர். கரந்தைத் தமிழ்க் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்த வெள்ளைவாரணனாரையும் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி ஆட்கொண்டது. ‘பரந்தாளூர் வெண்கோழியார்’ என்ற புனைப் பெயரில் ‘காக்கைவிடு தூது’ என்னும் நூலை எழுதி முதலமைச்சருக்கு அனுப்பியதன் மூலம் போராட்டத்தில் ஈடுபட்டார்.

‘சித்தாந்தச் செம்மல்’, ‘தமிழ்ப் பெரும்புலமைச் சான்றோர்’, ‘திருமுறை உரை மாமணி’, ‘செந்தமிழ்ச் சான்றோர்’, ‘தமிழ்மாமணி’, ‘சிவகவிமணி’, ‘திருமுறைத் தெய்வமணி’, ‘தமிழ்ப் பேரவைச் செம்மல்’ முதலிய விருதுகளையும், பட்டங்களையும் தமிழகத்திலுள்ள பல்வேறு இலக்கிய அமைப்புகளும், பல்கலைக் கழகங்களும் அளித்துச் சிறப்பித்துள்ளன! தமிழ்நாடு இயல் இசை நாடகமன்றம் இவருக்கு ‘கலைமாணி’ விருது வழங்கிப் பாராட்டியது.

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தபோது உடல் நலம் பாதிக்கப்பட்டு 1988 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 13 ஆம் நாள் இயற்கை எய்தினார்.


தமிழுக்குத் தொண்டு செய்து வாழ்ந்த வெள்ளைவாரணனார் பெயர், தமிழிலக்கிய வரலாற்றில் என்றும் நிலைத்து நிற்கும்.


காணொலிகள்


01] Dhinam Oru Kadhai | தமிழ்மணி க.வெள்ளைவாரணனார்
https://www.youtube.com/watch?v=SK1PQSmClVQ [13:51]

02] திருக்களிற்றுப்படியார் - 1: அம்மை - அருள் | அப்பர் - அறிவு
https://www.youtube.com/watch?v=S44G6x7VmuA [2:07:07]
சைவ சித்தாந்தத்துறை, சென்னைப் பல்கலைக்கழகம் அகரம் செந்தமிழ் மையம், இங்கிலாந்து ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து சைவ சித்தாந்தப் பெருமன்றம் [1905] நடத்தும்.

03] **தொல்காப்பியத்தில் இடைச்செருகல்கள் – பேராசிரியர் ப. மருதநாயகம் சிறப்புரை**
https://www.youtube.com/watch?v=w4lOU5ufi-Y [43:44]







(😊)(😊) வெள்ளைவாரணர் (😊)(😊)